# ஈழத்து
# இலக்கிய வளர்ச்சி

சன்மார்க்க சபை
1934
குரும்பசிட்டி

27

கனக - செந்திநாதன்

அரசு வெள

சன்மார்க்க சபை
1934
குரும்பசிட்டி

# நுழைவாயில்

"நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே?'' என்று ஒரு மேதை பாடினர். இது சரியான மதிப்பீடு. புலவர்களிடத்திலும் வித்துவான்களிடத்திலும் செய்யுள் நடை பயின்று கொண்டிருந்த தமிழ்ப் பாவையை அழைத்து, 'உனக்கு ஏற்ற வன்னநடை வசன நடைதான், இனிமேல் வாழக்கூடிய நடையும் வழங்கக்கூடிய நடையும் அதுதான்' என்றுபழக்கி வைத்த ஆசான் ஆறுமுகநாவலர் அவர்களே என்று பெருமிதம் விஞ்சக் கூறுகின்றார் இன்னொரு புலவர்.

அன்னநடை பிடியினடை அழகுநடை
யல்லவென அகற்றி அந்நாட்
பன்னுமுது புலவரிடஞ் செய்யுணடை
பயின்ற தமிழ்ப் பாவையாட்கு
வன்னநடை வழங்குநடை வசனநடை
யெனப்பயிற்றி வைத்தஆசான்
மன்னுமருள் நாவலன்றன் அழியாநல்
லொழுக்கநடை வாழி வாழி.

இந்த அருமந்த பாடல்—'சொல்லென்ற மலரிலே பொருளென்ற புதுமதுச் சொட்டிச்சுரக்கும்'

பாடல்—சோமசுந்தரப் புலவர் அவர்களுடைய தாகும். இது நாவலரின் உண்மையான தமிழ் மூச்சினை நேர்மையாக விமர்சிக்கிறது. ஈழத்தின் தமிழ் வளர்ச்சிச் சரித்திரம் பூதந்தேவனுர் என்ற புலவரோடு ஆரம்பிக்கிறது. பத்தொன்பதாம் நூற்ருண்டு வரையிலுள்ள ஈழத் தமிழ் முயற்சிகளை எழுதப் புகின், பெரியதோர் ஆராய்ச்சி நூலுக்கேற்ற ஏராளமான விடயங்கள் உள. பாவலர் சரித்திர தீபகம், தமிழ்ப் புலவர் சரித்திரம், ஈழமண்டலப் புலவர் சரித்திரம் என்னும் நூல்களிலே எத்தனையோ புலவர் பெருமக்களை நாம் சந்திக்கின்ருேம். முக்கியமாக இரகுவமிசம் பாடிய அரசகேசரி, மன்னர்களாக இருந்தும் மருத்துவமும் சோதிடமும் ஆக்கித்தந்து தமிழ் வளர்த்த செகராசசேகரன், பரராசசேகரன் ஆகியோர், ஈழத்து இலக்கிய வாயிலுக்குப் 'பொன் பூச்சொரிந்து பொலிந்த செழுந்தா திறைக்கும்' பருளை விநாயகர் பள்ளைப் பாடிய சின்னத்தம்பிப் புலவர், யாழ்ப்பாண வைபவ மாலை இயற்றிய மயில்வாகனப் புலவர், பரசமய கண்டனமாகிய ஞானக்கும்மி பாடிய முத்துக்குமார கவிராசசேகரர், நல்லைக் குறவஞ்சி பாடிய இருபாலைச் சேனுதிராய முதலியார் ஆகியோர் நம் மனத்தகத்தை விட்டு நீங்காமல் கொலுவீற்றிருக்கிருர்கள்.

ஆனல், சுருக்கமான இக்காலத் தமிழ் இலக்கிய முயற்சிகள் பற்றிய கட்டுரைக்கு முதற்கண் நிற்பவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களே. இருப்பினும், அவருடைய சேவைகள்கூடத் தமிழ் நாட்டின் இக்கால 'நவீன' விமர்சகர்களால், 'பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே என்றபடி மறக்கப்பட்டு—மறுக்கப்பட்டு—அழிவழக்காடப்படுகின்றன. இதோ, தமிழ்

நாட்டின் 'சலங்கை நடை' விமர்சகரான 'ஸ்ரீ'மான் ஒருவரின் விமர்சனத்தின் ஒருபகுதியைப் பாருங்கள்:

> ''சரவணப் பெருமாளையரும், விசாகப் பெருமாளையரும், இவர்களுக்குப்பின் தோன்றிய ஆறுமுகநாவலர் முதலானவர்களும் வளருந் தமிழிலக்கியத்தின் இன்றியமையாத பகுதியாய் மதிக்கத்தக்க கட்டுரைகளை எழுதிவிடவில்லை .....இராமலிங்கர் பாவலராகவும் நாவலராகவும் திகழ்ந்தவர். இவரது மனுமுறைகண்ட வாசகத்திலே எடுத்துக்கொண்ட பொருளை விரித்துரைக்கும் ஆற்றல் மிகுந்த வித்தகர் இவர் என்பதைக் காண்கின்றோம்.''

ஒரு கண்ணிலே வெண்ணெயும், மறு கண்ணிலே சுண்ணும்பும் வைத்துக்கொண்டு பேறுபிடிக்கும் இவ்வகை ஆராய்ச்சியாளருக்குப் பதில் சொல்வதற்கு இது தகுந்த இடமன்று. எஃது எவ்வாறாயினும், ஈழத்தமிழ் வளர்ச்சிச் சரித்திரத்திலே, பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்காலம் நாவலர் காலம். அக்காலம், வசன நடையாகிய குழந்தை தளர் நடைக்கு ஆயத்தம் செய்த காலம். அக்குழந்தைக்கு நடை வண்டி கொடுத்து, உறுதியாக நடக்க உதவிய பெருமை ஆறுமுகநாவலரவர்களுடையது.

ஆறுமுக நாவலர் பரிசோதித்தும், புத்துரையாத்தும், புதிதாய் எழுதியும் வெளியிட்ட நூல்கள் ஐம்பத்தொன்று. அச்சிற் பதிப்பிக்கும் பொருட்டு எழுதிமுடித்தவைகள் பத்து. எழுதத் தொடங்கியவைகள் ஒன்பது.

எல்லா நூல்களையும் அக்காலத் தமிழிலக்கியச் சூழலிலே வைத்து,

> பாலபாடங்கள் — சைவ வினுவிடைகள்;
> பெரிய புராண — திருவிளையாடற் புராண வசனங்கள்;
> நாவலர் பிரபந்தத் திரட்டு (கண்டனங்கள்)
> பெரியபுராண சூசனம்;
> அவர் பதிப்பித்த நூல்கள்

என ஐந்து பிரிவுகளாக வகுத்துக்கொண்டு ஆராய முற்படின், நாவலரவர்கள் தமிழ்ப் பாவைக்கு ஆசாஞகிய தன்மை ஒரு சிறிது புலப்படும். பாடசாலை மாணவர் தொடக்கம், பண்டிதர் வரைக்கும் படிப்படியாய்ப் படித்து அநுபவிக்கக்கூடிய ஆக்க வேலைகளை அவர் நமக்கு அளித்துவிட்டுச் சென்ற பெருமையுந் தெரியும்.

அடுத்து வருகிருர் ஒரு பரோபகாரி. 'செல்துளைத்த துளையன்றி மெய்ப்புள்ளி விரவாத சென்ஞேளேடுகளை' தன் கண்ணீராலே கழுவித் தொல்காப்பியம், கலித்தொகை முதலிய தொன்னூல்களைப் பதிப்பித்து, ஒல்காப் புகழ் மேவிய தாமோதரம்பிள்ளை தான் அவர். சென்னைச் சருவகலாசாலையிலே முதன் முதல் பீ. ஏ. பரீட்சையில் சித்தியடைந்து, உயர்தர உத்தியோகங்களை வகித்தும், தமிழ்த்தொண்டை விடாமற் செய்த அவரது சேவைக்கு ஈழத் தமிழ் மக்கள் என்ன செய்துவிட்டார்கள்? பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதிக்காலத் தமிழ்ச் சரித்திரமே தாமோதரம்பிள்ளையின் சரித்திரமாகும். கற்றுணர்ந்தோரேத்தும் கலித்தொகைக்கு அவர் கண்ணீரிலே தோய்ந்து எழுதிய முகவுரையைத் தமிழர் ஒவ்வொருவரும் படித்துப் பார்க்க வேண்டும்.

அவர் பதிப்பித்த நூல்கள் பதினொன்று. எழுதிய நூல்கள் ஆறு.

இப்படித் தொண்டு செய்த பிள்ளையவர்களையும் தமிழ்நாடு மறந்து கேலி செய்ததையும், உண்மையை மறைத்ததையும் எழுதப்புகின் அவை பாரதமாகிவிடும். இருபதாம் நூற்றாண்டிலே கால் வைக்கு முன்பே அவர் அமரரானார். அவர் அமரராகிய தினம் 1-1-1900.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஏறக்குறைய இருபத்தைந்து வருடகாலம் தமிழ் மூச்சுவிட்ட புலவர் குமாரசுவாமிப் புலவர் ஆவர். படாடோபத்தைக் கண்டு மயங்காமல், தன்னை உள்ளபடி மதிக்கின்றவர்களிடத்தில் மதிப்பு வைத்து, பிழைகளைக் கண்டவிடத்துக் கண்டித்துத் தலைநிமிர்ந்து வாழ்ந்தார். வடமொழியிலிருந்து மேக தூதம், சாணக்கிய நீதி, இதோபதேசம், இராமோதந்தம் என்பவற்றை மொழிபெயர்த்தும்; தமிழ்ப் புலவர் சரிதம், இலக்கியச் சொல்லகராதி, சிசுபால சரிதம், கண்ணகி கதை. இரகு வமிச சரிதாமிர்தம் என்பனவற்றை எழுதியும்; யாப்பு, தண்டி, அகப்பொருள் ஆகியவற்றிற்குப் புத்துரை எழுதியும்; கம்பராமாயணம் (பாலகாண்டம்), நிகண்டு, மறைசையந்தாதி, சதாசாரக் கவித்திரட்டு, ஞானக்கும்மி ஆகிய நூல்களைப் பதிப்பித்தும்; முப்பதுக்குமேற்பட்ட நூல்களைத் தந்ததுடன், மாணவர்களுக்கு முறையாகப் பாடஞ் சொல்லியும் அவர் நடமாடும் புத்தகசாலைபோன்று வாழ்ந்தார்.

இவர்களைத் தவிர இலக்கிய நயத்தை நுண்ணிதாக எடுத்துக்காட்டி உரை சொல்லிய வித்துவ

சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை; தமிழ் வரலாறு எழுதிய மட்டக்களப்புப் பூபாலப்பிள்ளை; ஈழமண்டல சதகம் செய்த உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை; தென்மொழி வரலாறு; அபிதானகோசம் என்பவற்றை இயற்றிய ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை; அகராதி வேலையை முறையாகச் செய்த கதிரைவேற்பிள்ளை, சனிவெண்பா இயற்றிய மட்டக்களப்பு வித்துவான் சரவணமுத்து ஆகியோரும், கவி சிரேஷ்டராக விளங்கிய சிவசம்புப் புலவர், திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானும் திராவிடப் பிரகாசிகை என்னும் நூலினை இயற்றியவருமாகிய கோப்பாய் சபாபதி நாவலர், தமிழ் நாவலர் சரிதை பதிப்பித்த தி. த. கனகசுந்தரம்பிள்ளை ஆகியோரும், பிறரும் ஈழத்தின் தமிழ் வளத்துக்குச் செய்த உபகாரம் கொஞ்சமன்று.

மதிப்பிற்குரிய பார்சிவல் பாதிரியார் இருந்து தமிழ் வளர்த்த யாழ்-மத்திய கல்லூரியும், 'வட்டுக்கோட்டைச் செமினரி' என்று அக்காலத்தில் வழங்கப்பட்டு இப்பொழுது யாழ்ப்பாணக் கல்லூரி எனப் பெயர் பெற்ற நிலையமும், கத்தோலிக்க நாடகப் புலவர் பலரும், கிறிஸ்தவ மதத்தோடு தமிழையும் வளர்த்ததை நாம் புறக்கணிக்க முடியாது. முறையான அகராதி தொகுப்பு வேலையையும், பிறநாட்டு விஞ்ஞான நூல்களைத் தூய தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்ட தொண்டையும், அக்கால அமெரிக்க மிஷன் பாதிரிமார்கள் ஏற்றுக்கொண்டு பெரும்புகழ் எய்தினார்கள்.

நாவலர் அவர்கள் 1822 இல் பிறந்தார். குமார சுவாமிப் புலவர் 1922 இல் மறைந்தார். இவற்றிற்கு இடைப்பட்ட நூறு வருடகாலத் தமிழ்ச்

சரித்திரத்திலே ஈழ நாட்டின் பங்கு பொன்னெழுத்துக்களாலே பொறிக்கப்படவேண்டியதென்பதில் ஐயமில்லை. ஈழநாடு தமிழ் நாட்டுக்கே வழிகாட்டித் தலைநிமிர்ந்து நின்றது. பணவருவாயை நாடாமல், உண்மையான தமிழ் அபிமானத்தால் உந்தப் பட்டுச் சேவை செய்தோர் பலர். உபயோக மான—வாழ்க்கைக்கு வழிகாட்டியான—சமய நூல்களையும் இலக்கிய நூல்களையும் வெளியிட்டும், வசனத்தில் எழுதியும், ஆராய்ந்தும், உரையெழுதியும் அவர்கள் செய்த சேவைக்கும், இப்போதைய எழுத்தாளர் செய்யும் இலக்கிய சேவைக்கும் உள்ள வித்தியாசம், மலைக்கும் மடுவுக்கும் உள்ள பேதம் போன்றது.

1922க்குப் பின் — குமாரசுவாமிப் புலவர் அவர்கள் மறைந்ததின்பின் — இன்றுவரை (ஏறக்குறைய நாற்பது வருட காலம்) ஈழ நாட்டில் நடந்த இலக்கிய முயற்சிகளைப் பற்றிப் பேராசிரியர்கள், எழுத்தாளர்கள் தொகுத்து ஒரு நூலையேனும் விரிவாக எழுதவில்லை. குமாரசுவாமிப்புலவருக்குப் பின்னர் தமிழ் இலக்கியம் மங்கி, மறைந்து, சுவடே தெரியாமல் ஈழத்தை விட்டு ஓடிவிட்டதா? ஆம். அப்படிக் கருதியவர்களும் இருந்தார்கள்.

கால ஓட்டத்தைக் கருத்திலே கொள்ளாமல், வெறும் புராணங்களைப் பதிப்பித்தும், உரை எழுதியும், சமயச் சண்டைகள் பிடித்தும், கண்டனக் கணைகள் தொடுத்தும், படித்தவர்களும் பண்டிதர்களும் காலத்தைக் கலா விநோதமாகக் கழித்தார்கள் - களிப்புற்றுர்கள். பொதுமக்களின் பிரச்சினைகள், அவர்களது ஆசாபாசங்கள், மனே எழுச்சிகள், சிந்தனைகள் எதற்கும்அவர்கள் மதிப்புக்

கொடுக்கவில்லை. அவர்களது மொழி நடையைக் கூடக் கையாளாமல், ஏதோ ஒரு படாடோபமான நடையைக் கையாண்டார்கள். தப்பித்தவறி யாராவது கையாண்டால் இழிசனர் வழக்கு என்று கேலியுஞ் செய்தார்கள். இதனால், படித்தவர்களென்றால், அவர்கள் உலகம் தெரியாதவர்கள் என்றும், ஏதோ புதுவகைச் சாதி மனிதர்களென்றும், தங்களுக்கிடையில் குழூஉக் குறியாக ஒரு மொழியைக் கையாள்பவர்களென்றும், அவர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையில் ஒருவகைத் தொடர்புக்கும் இடமில்லையென்றும் கருதியவர்களும் இருந்தார்கள்.

குமாரசுவாமிப் புலவருக்குப்பின் இன்றுவரை உள்ள காலத்தை வரையறை செய்து எப்படிச் சுருக்கமாக ஆராயலாம்? இது சிக்கல் மலிந்த ஒரு பிரச்சினை. வளருந் தமிழ் என்ற புத்தகமெழுதிய 'சோமலெ' அவர்களைப் போல எழுத்துக்களை இருபத்தெட்டு வகையாக வகுத்துக்கொண்டு எழுதினால் நல்லதுதான். அதற்கு மிகுந்த பிரயாசையும் கூட்டு முயற்சியும் தேவை. பிரபல சிறுகதை ஆசிரியராகிய கு. ப. ரா. அவர்கள் தமது வானொலிப் பேச்சொன்றிலே 'தற்காலச் சிறுகதை இலக்கியம்' பற்றிக் குறிப்பிடும்பொழுது எழுத்தாளர்களை மூன்று வட்டாரமாக்கிப் பேசினார். அவை கலைமகள் 'மணிக்கொடி, ஆனந்த விகடன் என்பன. அப்படி ஈழத்திலே சொல்ல முயன்றால் ஈழகேசரி, மறுமலர்ச்சி, சுதந்திரன் என மூன்று பிரிவுகளாக வகுக்கலாம். இந்தப் பிரிவு வெகு செயற்கையானது. எழுத்தாளர்களை அவர்கள் இப்பொழுதில்லாத ஏதோ ஒரு வட்டத்துட் கொண்டுபோய் விட்டுவிடும். இது

துவேஷத்தை உண்டாக்கும் வினை விளைக்கலாம். எனவே அப்படிப் பிரிப்பது முறையன்று என்றே நினைக்கின்றேன். இதைவிடப் பண்டித வர்க்கம், மறுமலர்ச்சி வட்டம், முற்போக்குக் குழூஉ எனப் பிரிக்கலாமா என்கிற எண்ணமும் எழுகின்றது. இந்த மூன்று வகைக்கும் வரைவிலக்கணம் கூறுதல் இலகுவான காரியமன்று. மேலும் கால ஓட்டத்திலே ஒரு வட்டத்தை விட்டுப் பிறிதோர் வட்டத்திற்கு இடம் பெயர்ந்து சென்ற அநேகம் எழுத்தாளர் உளர். ஒவ்வொரு வட்டத்தைப் பற்றியும் முற்றிலும் முரணான வரைவிலக்கணங்களைப் பலர், பல காலத்திற் கற்பித்துச் சிக்கலை மேலும் சிக்கலாக்கி வைத்திருக்கிறார்கள். இவற்றை விடுத்துக் காலத்தை ஒட்டிப்பிரிப்பது சௌகரியமான வழி. அவ்வக் கால எல்லையுள் முற்கூறிய பகுப்புமுறையை உள்ளடக்கி எழுதுவதுதான் சுலபமானது. அவற்றுள் அகப் படாதவற்றை விசேடமாகக் குறிப்பிடலாம் என்பதும் என் எண்ணமாகும்.

எனவே,

1922 தொடக்கம் 1930 வரை

1931 தொடக்கம் 1940 வரை

1941 தொடக்கம் 1950 வரை

1951 தொடக்கம் 1960 வரை

1960 இன் பின்னர் ... ...

என ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரித்து வைத்துக் கொண்டு மேலே செல்லலாம். இதிலேகூட எச்சரிக்கை தேவை. இக் காலவரையறை, சொல்லும் விடயத்தைச் சுலபமாகவும் - சுருக்கமாகவும் சொல்ல நாமாகவே ஏற்படுத்திக்கொண்ட உபாயமே ஒழிய, வரம்பன்று. சில நிகழ்ச்சிகள் சிறிது காலம் முன் பின்னாகவும் நிகழ்ந்திருக்கலாம் என்பதை நினைவில் வைத்திருத்தல் வேண்டும்.

* * *

சன்மார்க்க சபை
1934
குரும்பசிட்டி

# 1922 - 1930

இக்கால எல்லையுள் நால்வரே முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். இந்நால்வரும் தம் மரண பரியந்தம் தமிழ்த்தொண்டு செய்தவர்களாயினும் - பிற்காலத்தேதான் புகழ் பெற்றிலங்கினராயினும் - இக்கால எல்லையைச் சேர்ந்தவர்களே. 'தொல்காப்பியம்' - கணேசையர், 'யாழ் நூல்' - விபுலாநந்தர், 'உலகியல் விளக்கம்' - நவநீதகிருஷ்ண பாரதியார், 'சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி' - சுவாமி ஞானப்பிரகாசர் என்போரே இவர்கள். இந்நால்வரும் ஈழத்தின் ஒளிவிளக்குகள் என்பதற்குச் சந்தேகமில்லை.

தமிழ்ச்சுடர் மணிகளாகிய நாவலர், தாமோதரனார், குமாரசுவாமிப் புலவர் என்போரது பழைய பண்பாட்டை மறவாத, சிஷ்ய பரம்பரையாக மகாவித்துவான் சி. கணேசையர் அவர்கள் விளங்கினார். மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய 'செந்தமி'ழில் இலக்கண நுணுக்க விடயங்களை எழுதியும், பெரும் வித்துவான்களோடு தர்க்கித்தும் அவர் இக்காலத்திலேயே புகழெய்தி விட்டார். அவர் தமிழுக்குச் செய்த தொண்டு அளவில்லாதது; ஈழத்துக்குப் பெருமை தரக்கூடியது. தொல்காப்பியம் முழுவதற்கும் உரை விளக்கக்

குறிப்பெழுதியதைத்தான் இங்கு குறிப்பிடுகின்றேன்.

ஈழத்துப் பெரும்புலவராகிய அரசகேசரியின் 'இரகு வமிச'த்திற்கு உரை எழுதிய காலத்தைப் பார்க்கிலும், தொல்காப்பியம் எழுத்ததிகாரம் வெளிவந்த காலத்திலேதான் அவர் புகழ் ஓங்கத் தொடங்கிற்று. அவருடைய சஷ்டியப்த பூர்த்தி விழாவை 8-10-38 இல் கொண்டாடிய பொழுது, தமிழ்நாடும் ஈழமும் ஒருமுகமாக வாழ்த்தின. அதை அடுத்து, தொல்-சொல்லதிகாரத்தையும் பொருளதிகாரத்தையும் உரை விள்க்கக் குறிப்புக்களுடன் வெளியிட்டு கணேசையரவர்கள் ஈழத்தின் புகழை மேலும் ஒருபடி உயர்த்தினர்.

1859ஆம் ஆண்டில், சைமன் காசிச்செட்டி என்பவரால் ஆங்கிலத்தில் 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' எழுதப்பட்டது. 1886 இல் ஆனல்ட் சதாசிவம்பிள்ளை அவர்களால் 'பாவலர் சரித்திர தீபகம்' என்ற பெயரால் தமிழ்ப் புலவர் சரித்திரம் தமிழில் எழுதப்பட்டது. இதனை விரித்து, 1916 இல் குமாரசுவாமிப் புலவர் அவர்கள், 'தமிழ்ப் புலவர் சரித்திர'த்தை எழுதினர். 1922 இல் ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை அவர்களால் மிகச் சுருங்கிய அளவில் 'ஈழமண்டலப் புலவர் சரித்திரம்' தொகுக்கப்பட்டது. 1939 இல் இவை எல்லாவற்றிலும் இருந்து மலரெடுத்து அழகிய மாலையாகத் தொடுத்து 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித'த்தைக் கணேசையர் அவர்கள் தந்தார்கள். இது கணேசையர் ஈழத் தமிழர்களுக்களித்த முதுசொத்து. இதைவிட மாணவர்களுக்காக குசேலர் சரித்திரத்தையும்

அவர் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலக்கண சுத்தத்தை முக்கிய நோக்கமாகக் கொண்ட அவரது தமிழ்நடை இறுக்கமும் கடினமும் கொண்டது என்பதுண்மை. சாதாரண மூன்ருந்தரப் புலவரும் முதற்றரக் கவிதா சிரேஷ்டர்களும் ஒரே வகையாக எழுதப்பட்டிருக்கிருர்கள் என்பது ஈழ மண்டலப் புலவர் சரித்திரத்தைப்பற்றிய ஒரு குறையாகும்.

ஈழ நாட்டிலே பி. எஸ்ஸி. என்னும் ஆங்கிலப் பட்டத்தோடு முதன்முதலாக மதுரைத் தமிழ்ப் பண்டிதராகிய பெருமைக்குரியவர், கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பைச் சார்ந்த காரை தீவிலே பிறந்து, தமிழ்பேசும் இடமெல்லாவற்றிற்கும் உரிமையாளராக விளங்கிய விபுலாநந்தர் அவர்கள். அவரது ‘யாழ்நூல்’ ஈழத்தமிழர்க்குப் பெருமையளிக்கக்கூடியதென்பதிற் சந்தேகமில்லை. ஆனல், 1927 இல் வெளியிட்ட மதங்க சூளாமணியும், பண்டிதமணி கதிரேசச் செட்டியாரது மணிமலரில் எழுதிய ஆங்கில வாணியுந்தான் சராசரித் தமிழ் படித்த இரசிகர்களைக் கவரக்கூடியன என்பது தான் என் முடிவு. ‘விபுலாநந்தத்தேன்’ என்ற பாடற்றெகுதியும், அவருடைய கட்டுரைத் தொகுதிகளும் சமீப வெளியீடுகளாக வெளிவந்திருக்கின்றன. அவருடைய சொற்பொழிவும் கட்டுரைகளும் ஏற்ற இறக்கமின்றிச் சலசல என்ருேடும் ஒரு தெளிந்த நீரோடைபோன்று காட்சி அளிக்கின்றன. எத்தனையோ புதுமையான விடயங்களை அவர் சொல்லியிருப்பதோடு மறுமலர்ச்சி இலக்கியத்துக்கு வித்தூன்றி, பாரதிபாடல் தொடக்கம் நாட்டுப் பாடல்வரை நாட்டில் முழங்க முயற்சியும் செய்திருக்கின்ருர்.

தமிழ் நாட்டிலுள்ள திருக்கண்ணபுரத்தில் பிறந்து, யாழ்ப்பாணத்தை அடைந்து, ஈழத்தையே தாய்நாடாகக்கொண்டு வாழ்ந்த நவநீதகிருஷ்ண பாரதியார் 1922 இல் வெளியிட்ட உலகியல் விளக்கமும், பிற்காலத்தில் எழுதிய திருவாசக உரையும் படித்த - பண்டித வர்க்கத்தினராற் பெரிதும் போற்றப்பட்டன. அச்சேருத காந்தி வெண்பாவும், பிறபாடல்களும், மாணவர்க்காக எழுதிய இலக்கண நூல்களும், பொதுசன இரஞ்சக மான அவரது சொற்பொழிவுகளும் பாரதியாரைப் பற்றிய முடிவைச் சிக்கலாக்குகின்றன என்ப துண்மை.

தமிழ்ச் சொற்பிறப்பாராய்ச்சியையே உயிர் மூச்சாகக் கொண்ட சுவாமி ஞானப்பிரகாசர் அவர் கள், தமிழ்நாடே இன்னும் உள்நுழையாத தமிழ்ச் சொற்களின் தாது ஆராய்ச்சியில் இறங்கி அருமை யானஅகராதியை உருவாக்கியிருக்கின்றனர். சாதா ரண வாசகர்களுக்கு இது தெரியாத சங்கதிதான். எனினும், இதனுலே தமிழின் தொன்மை—பரப்பு— தனித்தன்மை — மற்றமொழிகளுக்குத் தாயான விதம் எல்லாம் புலனுகும். மேலும், தமிழிலே. தருக்கம், யாழ்ப்பாண வைபவ விமரிசனம் முதலிய உபயோகமான நூல்களும், பல கண்டன நூல்க ளும் எழுதியிருக்கின்றனர். முந்திய மூவரிலும் பார்க்க நடையில் எளிமையும், சாதாரன வாசகனுக்கு விளங்கவேண்டும் என்ற எண்ணத்தின் பிரதி பலிப்பும் இவரிடம் காணப்படுகின்றன.

இந்நால்வருடன், இன்னும் ஒருவரைப்பற்றி யும் குறிப்பிடவேண்டும். சாதாரண மக்கள் கவி யாக—விகடகவியாக—சாதாரண மக்களின் அபி

லாஷைகளைப்பாடும் கவியாக—இருந்த ஆசுகவி வேலுப்பிள்ளை தான் அவர். 'சுதேச நாட்டியம்' என்ற பத்திரிகையை நடாத்திப் பொதுசனப் புகழைப் பெற்ருர். பத்திரிகையின் குறிக்கோளாக அவர் போட்டுக்கொண்டது என்ன தெரியுமா? 'யதார்த்த வாதி வெகுசனவிரோதி' என்பதுதான்! அவருடைய பெரும் முயற்சியாக 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' என்ற பெருநூல் விளங்குகின்றது. இது யாழ்ப்பாணத்தின் பழைய சரித்திர சம்பவங்களையும், குடியேற்றங்களையும், சாதி ஆராய்ச்சிகளையும் அறிய விரும்புகிறவர்கள் படித்துப் பார்க்க வேண்டிய நூலாகும். இவரது பாடல்களும், வசனமும் குத்தலோடும் கிண்டலோடும் கூடியவை. 'கண்டனங்கள் கீறக் கல்லடியான்' என்ற பெருமை பெற்ருர் இவர்.

ஆறுமுக நாவலர் தொடக்கம் வேலுப்பிள்ளை வரையுமுள்ள புலவர் பெருமக்களையும், வித்துவ இரத்தினங்களையும் எழுத்தாளர் வரிசையிலே சேர்க்கலாமா? இது கேட்கப்பட வேண்டிய ஒரு கேள்வி. 'எழுத்தாளன்' என்று இக்காலத்தில் வழங்கப்படும் பொருளில் — சொல்லில் — அவர்கள் விளங்கவில்லையென்ருலும், அவர்கள் செய்த முயற்சிகளாலே தான் இன்றும் நாம் தலைநிமிர்ந்து நிற்கின்ருேம் என்பதுண்மை. இப்படியான ஒளிவிளக்குகளின் ஆராய்ச்சி நூல்கள், கண்டனங்கள், முதலியவற்ருேடு சாதாரண பொதுமக்கள் படித்து இரசிக்கக்கூடிய கதைகள்—நாவல்கள் இல்லையா? என்ற குரல் கேட்கின்றது.

தமிழ்நாட்டில் வேதநாயகம்பிள்ளை, மாதவையா, இராஜமையர், பொன்னுசாமிப்பிள்ளை, நடேச சாஸ்திரிகள் முதலியோர்களும், ரெங்கராஜு, துரைசாமி ஐயங்கார் போன்றவர்களும் இலக்கியத்தரமுள்ள

நாவல்களையும், துப்பறியும் கதைகளையும் எழுதி வந்தபோது அதன் வாடை ஈழத்தைத் தாக்க வில்லையா? ஈழம் வேலிகட்டிக்கொண்டு வாழ்ந்ததா?

இல்லவேயில்லை.

ஈழத்தின் புனைகதை இலக்கிய முயற்சிகள் திருகோணமலையிலே தொடங்கிற்று என்பது குறிப் பிடத்தக்கது. ஆங்கிலக் கதையைத் தழுவி, இன்னாசித்தம்பி அவர்கள் எழுதிய 'ஊசோன்பாலந்தை கதை' 1891 இல் வெளிவந்தது. இதுவே ஈழத்திலே வெளியான முதல் நாவலாகக் கருதப்படுகின்றது. தி. த. கனகசுந்தரம்பிள்ளையின் தமையனார் திரு கோணமலை சரவணமுத்துப்பிள்ளை அவர்கள், மோக னாங்கி என்னும் கற்பனை நாவலை எழுதி 1896 இல் பதிப்பித்தார். இரண்டாம் பதிப்பில் இந்நாவலின் மகுடம் சொக்கநாதன் என்று மாற்றப்பட்டது.

"நாகரிகமான புதுமுறைகொண்டு நம் நாட்டிற் கற்பனா சரித்திரங்கள் எழுதி வெளியிட்டவர்கள் மிகச்சிலரே. இவர்களில் முதலாவதாக வைத் தெண்ணப்படுபவர்கள் சி. வை. சின்னப்பபிள்ளை யவர்களே" என்று வண்ணைநகர் மா. சிவராமலிங்கம் பிள்ளை அவர்கள் ஒரு முகவுரையிற் கூறுகின்றார். சி. வை. சின்னப்பபிள்ளை அவர்கள் தமிழ்ப் பரோபகாரி; சி. வை. தாமோதரம்பிள்ளை அவர் களது கனிஷ்ட சகோதரராவர். இவர் இந்தியா விற் கௌரவமான உத்தியோகத்திலமர்ந்து, பின் உபகாரச் சம்பளம் பெற்று இங்கு வந்து எஞ்சிய காலத்தைக் கல்வி விருத்திக்கே அர்ப்பணித்தவர். இவர் வீரசிங்கன் கதை, இரத்தினபவானி, உதிரபாசம், விஜயசீலம் முதலிய நாவல்களை எழுதியிருக்கின்றார். ஈழ நாட்டின் சரித்திரத்தோடு சம்பந்தப்பட்ட

விஜயனின் கதை 'விஜயசீலம்'. அது 1916ஆம் ஆண்டிலேயே ஒரு நாவலாக எழுதப்பட்ட தென்றால் ஆச்சரியப்படக்கூடிய விடயமல்லவா?

இவரை அடுத்துப் பலர் இத்துறையில் முயன்றனர். ஆனால், வீரசிங்கன் கதை, விஜய சீலம் என்ற நூல்கள் பெற்ற வெற்றியை அவை அடைய வில்லை என்று பலர் கருதுகின்றனர். இடைக்காடர் அவர்களால் எழுதப்பட்டு, 1925 ஆம் ஆண்டில் வெளிவந்த சித்தகுமாரன் என்ற இருபாக நாவலை 'நாவல்' என்று சொல்வதற்கு இயலாமல் இருக்கின்றது. வெறும் உபதேசங்களைக் கதா பாத்திரங்கள் மூலமாய்ப் போதிக்கும் ஒரு போதனை நூல் போல் அது காட்சியளிக்கின்றது.

ஆனால், இதனைத் தொடர்ந்து வெளிவந்த அ. நாகலிங்கம் எழுதிய 'சாம்பசிவ ஞானமிர்தம்' அல்லது 'நன்னெறிக் களஞ்சியம்' (1927) என்னும் நாவல் பல நல்லறிஞர்களின் பாராட்டைப் பெற்றது.

துப்பறியும் நாவல்களாக பூங்காவனம் (மா. சிவராமலிங்கம் பிள்ளை), பவளகாந்தன், அருணோதயம் (வரணியூர் இராசையா), செல்வரத்தினம் (வே. க. நவரத்தினம்), மேகவர்ணன் (வே. வ. சிவப்பிரகாசம்), குலநாயகி திலகவதி (ம. க. சின்னையா), காந்தமலர் (சி. வே. தாமோதரம்) என்பன இக்கால எல்லையுள் எழுந்தன. இந்தியாவிலிருந்து இங்கு வந்து வீரகேசரியிற் கடமையாற்றிய ப. நெல்லையாவும் மூன்று நாவல்களை எழுதினர்.

பெண் எழுத்தாளரும் இந்தக் காலத்தில் நாவல்கள் எழுதியுள்ளமையை விசேடமாகக் குறிப்பிட்டே ஆகவேண்டும். செ. செல்லம்மாள் என்பவர் 'இராசதுரை' என்ற நாவலை எழுதினர்.

இக்கால எல்லையில் பழந்தமிழ் மரபினை அடியொற்றிப் பிறந்த இலக்கிய முயற்சிகளையும், அவற்றினைக் காலாகக்கொண்டு மலர்ந்த புதுவகை இலக்கிய முயற்சிகளையும் காணுதல் கூடும். பழைமையும் அதன் வழிவந்த புதுமையும் ஒருசேர சங்கமித்தமையால், இதைச் 'சங்கமகால'மெனவும் கூறலாம். அன்றியும், எதிர்காலப் புதுமை முயற்சிகளுக்கு இக்கால எல்லையின் முயற்சிகளே அடித்தளமாயும் அமைந்துவிட்டன.

* * *

# 1931 - 1940

இக்காலத்திலே, ஆசியாவின் இலக்கிய முயற்சிகளிலே பரவலான மறுமலர்ச்சி தோன்றத் தொடங்கிவிட்டது எனப் பல விமர்சகர்கள் கருதுகின்றார்கள்; உண்மை. பாரத தேசத்திலும் — தமிழ்நாடு உட்பட — இக்காலத்தில் அரசியற் பின்னணி உந்துதலினாலே இலக்கிய மறுமலர்ச்சி ஏற்பட்டது. மகாத்மா காந்தியின் உப்புச் சத்தியாக்கிரக இயக்கம் தேசமெங்கும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. அவரின் தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, அகிம்சை ஆகிய கொள்கைகளைப் பிரசாரஞ் செய்ய ஒவ்வொரு மாகாணத்திலும் புதிய சக்திகள் கிளைத்தெழுந்தன. ஆட்சி மொழியான ஆங்கிலத்தில் வெளிவந்த பத்திரிகைகளின் பெருஞ் சோதியின் முன் சோபையை இழந்தவையாகக் கருதப்பட்ட சுயமொழிப் பத்திரிகைகள், புதிய கோலத்திலே சரிநிகர் சமானமாகத் தலை தூக்கின. தமிழ் நாடும் இத்தொண்டிலே பின் தங்கிவிடவில்லை. ஆனந்த விகடன், தமிழ் நாடு, சுதந்திரச் சங்கு, ஊழியன் ஆகிய பத்திரிகைகள் அதிலே விசேடமாக முனைந்து முன்னேறின.

ஆங்கில விமர்சன அறிவுடன், சமகால நிகழ்ச்சிகளை மட்டும் அசைபோட்டுக்கொண்டு, வித்தாரஞ் செப்ப முன்வந்துள்ள புது விமர்சகர், ஈழநாட்டின் தமிழ் இலக்கிய முயற்சிகளிலேயுள்ள அரசியல் தாக்கத்தினை நாட்டின் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்திற்குக் கொண்டு வந்து நிறுத்துகின்றனர். 1956 இல் நடைபெற்ற 'மௌனப் புரட்சி'யிலிருந்து ஈழத்தின் ஆற்றலிலக்கிய முயற்சிகளின் கணக்கெடுப்பினை நடாத்த முன்வருவோருக்கும் பஞ்சமில்லை. காலவரையறைகளை இப்படிச் சுருக்கிக் கொள்வது சிலபல வட்டார நலன்களைப் பேணுவதற்குச் சௌகரியமாக இருக்கலாம். ஆனால், இஃது இலக்கிய வரலாற்று மாணுக்கனை ஏமாற்றுகின்றது. இலக்கியம் அரசியல் தாக்கங்களுக்கு மசிந்து கொடுக்காத சுயம்புவன்று. அரசியல் தாக்கத்தினால் இலக்கிய விழிப்புணர்ச்சி பல சந்தர்ப்பங்களிலே ஏற்பட்டிருக்கின்றது. இருப்பினும், ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில், பெருமளவில் அரசியல் தாக்கத்தினை உணர்ந்த கால எல்லை, இதுதான் (1931—1940) என்பது எனது அபிப்பிராயமாகும். சில 'புத்திசாலி' விமர்சகர்கள், ஒரு காலத்தின் இலக்கிய எழுச்சியை அவதானித்துவிட்டு, சரித்திரத்தில் உதிரியாகவுள்ள ஒரு சம்பவத்தினைப் பெயர்த்தெடுத்து, நேர்மையற்ற காரண வாதங்களுடன், பொருந்தாத் திருமணஞ் செய்து வைக்கின்றார்கள். இச்செயல் வரலாற்றுப் புரட்டாகும்.

பாரத நாட்டின் காந்தீய இயக்கத்திற்கும், ஈழநாட்டின் தமிழ் இலக்கிய முயற்சிகளிலே ஏற்பட்ட மாற்றங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இக்காலத்தில் எழுதப்பட்ட பல கதைகள் காந்தீயப் பிரசார மூச்சினை அடிநாதமாகக்கொண்டு விளங்கி, எனது கூற்றினை நிரூபிக்கின்றன.

இக்கால எல்லையிலேதான் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் 'பகிஷ்கார இயக்க'த்திற்குப் பக்க பலமாகவும், காந்திய நோக்கை மக்களிடையே பரப்புந் தொண்டிற்காகவும், புதிய இளைஞருலகைக் கையேற்று அவர் தம் படைப்புகளை வெளியிடும் நோக்கத்திற்காகவும் திரு. நா. பொன்னையா அவர்களால் ஈழகேசரி தொடங்கப்பட்டது. அது தொடக்க காலத்தில் கடினமான இலக்கிய-சமயக் கட்டுரைகளைக் கொண்டு வெளிவந்தது. பின்னர், பழைமைக்கும் புதுமைக்கும் நடந்த போராட்டமாக அது ஐந்து வருட காலத்தைக் கழித்தது. ஒரு புறத்திலே திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, ஆயிரத்தெண்ணூறு வருடங்களுக்கு முன் தமிழர் நிலை, வேளாளர் வருண ஆராய்ச்சி முதலிய விடயங்களும், மறு புறத்திலே சுயா, அநுசுயா முதலியோரது 'யாழ்ப்பாண நடை'க் கட்டுரைகளும், அருணோதயம், பவளகாந்தன், தேவி திலகவதி முதலிய நாவல்களுமாக அது வெளியிட்டது.

இதே காலத்திற்றான் க. வே. சாரங்கபாணி (ஆசுகவி வேலுப்பிள்ளையின் மகன்) என்ற எழுத்தாளர் அரசியல், விமர்சனம், நாடகம் ஆகிய துறைகளிலே தன் கைவண்ணத்தைக் காட்ட ஆரம்பித்தார். கைவண்ணம் என்கிற சொல்லைக் கருத்துச் செறிவுடன் உபயோகிக்கின்றேன். மிக இளமையிலேயே மரணமடைந்த இந்த எழுத்தாளர் ஈழத்தின் ஒளி விளக்காகத் திகழ்வார் என்றே கருதப்பட்டார். இவரது 'நமது தாயகம்' என்கிற நூல் மிடுக்கான வசனங்கொண்டது. அந்நூலும், சத்தியேஸ்வரி என்கிற நாடக நூலும் அவரை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கின்றன,

இந்தக் கால எல்லையுள் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களே. புலவர் அவர்களது 'ஆடிப்பிறப்பு' 'கத்தரி வெருளி' முதலிய பாடல்களை வைத்துக்கொண்டும், பிற தனிப்பாடல்களை வைத்துக்கொண்டும், அவரைப்பற்றி கற்பனை வளமற்ற 'வெறும் யதார்த்தக் கவிஞர்' எனப் பிழைபட்ட ஒரு முடிவுக்குச் சில தற்கால விமர்சகர்கள் வந்திருக்கிறார்கள். சிறுவர்களுக்குப் படிப்பிக்க உகந்த பாடல்களை — ஒரு தேவைக்காக அவர் எழுதிய அந்தப் பாடல்களை — வைத்துக்கொண்டு, 'அவர் ஒரு புதுமைக் கவிஞர்' என்று முடிவு கட்டுவது தவறு. பழைமைக்கும் புதுமைக்கும் நடந்த போராட்டத்தின் பிரதிநிதியாகத்தான் அவர் காட்சியளிக்கின்றார். ''கவிஞர் திலகமாய் விளங்கியவரும் 1953 இல் காலமாகியவருமாகிய நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஒரு பெருங் கவிஞராவர். அவருடைய புகழ் ஈழத்துக்கு வெளியே பரவாமலிருப்பது வருந்தத்தக்கது. அவர் பதினாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். 'ஆடிப்பிறப்பும், கத்தரித் தோட்டத்து வெருளியும்' என்ற பாடல்கள் மிகச் சிறந்தன. இலங்கை வளமும் தால விலாசமும், சிறுவர் செந்தமிழும் அவருடைய சிறப்பான நூல்கள்'' என்று 'வளருந் தமிழ்' என்ற நூலில் 'சோமலெ' அவர்கள் எழுதியிருப்பதை வாசித்தால், அவரும் சோமசுந்தரப் புலவர் அவர்களைச் சரியாக மதிப்பிடவில்லை என்றே தோன்றுகின்றது. தந்தையார் பதிற்றுப் பத்து, நாமகள் புகழ்மாலை, உயிரிளங் குமரன் நாடகம், கதிரைச் சிலேடை வெண்பா என்பனவும், மரதனஞ்சலோட்டமும் புலவர் அவர்கள் பாடியவை என்பதை நாம் நினைவிற்கொள்ளல் வேண்டும்.

1938 ஆம் ஆண்டிற்குச் சற்று முன்னர் பின்னராகப் பல எழுத்தாளர்கள் எழுத்துத் துறைக்கு வந்துவிட்டார்கள். எனினும், இவர்களையெல்லாம் 1940 ஆம் ஆண்டிற்குப் பின்வந்த எழுத்தாளர் என்று குறிப்பிடுவதுதான் பொருத்தமானதாக இருக்குமென நினைக்கின்றேன்.

ஈழநாட்டுப் புலவர் பெருமக்களையும் அறிஞர்களையுங் கொண்ட 'கலாநிலையம்' என்னும் தாபனம் க. நவரத்தினம் அவர்களின் பெருமுயற்சியால் நிறுவப்பட்டு, அங்கு சொற்பொழிவுகளும் ஆராய்ச்சிகளும் நடாத்தப்பட்டன. கலை ஆக்கங் கருதி ஞாயிறு என்னும் சஞ்சிகையும் சில காலம் நடாத்தப்பட்டது. ஒரு சில இதழ்களே வெளி வந்தாலும் வாசகர் நெஞ்சிலே அது நிலையான ஓர் இடத்தைப் பெற்றுவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்திலே, அமைதியான முறையில் இலக்கிய இரசனையையும், முறையான கல்வியையும் பரப்பத்தொண்டு செய்த ஒருவரைக் குறிப்பிட்டேயாக வேண்டும். அவர்தான் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை மையமாகக்கொண்டு அவர் ஒரு காவிய பாடசாலையை உண்டாக்கினர். தமிழிற் பால பண்டித — பண்டித வகுப்புக்களும், சமஸ்கிருத—சிங்கள வகுப்புக்களும் ஒவ்வொரு வாரமும் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நடாத்தப்பட்டன. பண்டிதர் அவர்களின் இரசிகத்தன்மையும், அவருடைய படிப்பிக்கும் ஆற்றலும், சொற்பொழிவுத் திறனும் அங்கே படித்த மாணவர்களையும், அவர்களாற் பரம்பிய மாணவ வர்க்கத்தையும் இறுகப் பற்றிக்கொண்டது.

இதே காலத்திலே, கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியாக இருந்தவரும், கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப்படுபவருமான **குருகவி மகாலிங்கசிவம்** அவர்கள் தமது ஆழ்ந்த புலமையுள்ள சொற்பொழிவினால் இலக்கிய இரசனையை வளர்த்தமை ஈண்டு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

1922 ஆம் ஆண்டிற்குப்பின் சுமார் பத்து வருட காலம் தூங்கிக் கிடந்த யாழ்ப்பாணம் — எதற்கெடுத்தாலும் தமிழ் நாட்டையே எதிர்பார்த்திருந்த யாழ்ப்பாணம் — தன் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டது.

இதைப்போன்ற ஓர் எழுத்தாளர் வட்டாரம் கொழும்பில் 'வட்டத் தொட்டி'யாகக்கூடி ஈழத் தமிழரும், வளர்ந்து வரும் தமிழிலக்கியப் பரப்பை அறிவதற்கு ஏதாவது செய்யவேண்டும் என முனைந்தது.

இத்தகைய ஒரு பின்னணியிலே பழைமையை ஆராய வேண்டும்; புதியனவற்றை ஆக்கவேண்டும்; அதிலும் ஈழத்துக்கே தனித்துவமாக அமைந்துள்ள கலாசாரத்தினையும் பண்பாட்டினையும் பிரதிபலிக்க வேண்டும் என்கிற ஓர் எழுச்சி உதயமாயிற்று. பிற்காலத்திலே 'தேசிய இலக்கியம்' என்பதை ஒரு 'கோஷ'மாக முன்வைத்தவர்கள் இந்தக் காலஎல்லையின் எழுச்சியை உணரக் கடன்மைப்பட்டவர்கள். இவ்வெழுச்சிக்கு ஏற்றதொரு சங்கப் பலகையாக 'ஈழகேசரி'யே எழுத்தாளர்முன் காட்சியளித்தது.

இக்காலத்தில் வட பெரும்பாக வித்தியாதரிசியாயிருந்த **கே. எஸ். அருணந்தி** அவர்கள், ஆசிரியர் சங்கங்களின் உதவியோடு பாடசாலை மாணவர்கள்

படிப்பதற்கேற்ற இலக்கிய பாடல்களைப் புனையுமாறும், அவற்றிற்குப் பரிசில்கள் வழங்குமாறும் ஏற்பாடுகள் செய்தார். இந்த முயற்சியின் பெறுபேறாகத் தமிழாசிரியர்களிடையே புதிய பல கவிஞர்கள் தோன்றினர்கள். 'பிள்ளைப் பாட்டு' (1938) என்ற அந்த நூலால் எத்தனையோ பேர் தன்னம்பிக்கை கொண்டு எழுத்துலகிற்கு வந்தனர்.

எனவே, 1940 ஆம் ஆண்டிற்குப் பின் தமிழிலக்கியத்திலுள்ள பல துறைகளிலும் எழுத்தாளர் முன்னேறித் தமது படைப்புகளைப் பொது மக்களுக்கு முன் வைப்பதற்கு வேண்டிய சாதகமான சூழ்நிலைகள், இக்கால எல்லையின் பின் ஐந்து வருடங்களுக்குமிடையிற் பரவலாக ஈழ நாட்டிலே தோன்ற ஆரம்பித்து விட்டதென்பதை அவதானிக்க வேண்டும். இச்சாதகமான சூழ்நிலைகள் உருவாகியிருந்த காலத்திலேதான், அப்பொழுது 'ஆனந்தவிகடன்' பத்திரிகையின் ஆசிரியராயிருந்த 'கல்கி' அவர்களும், சித்திரக்காரர் 'மாலி' அவர்களும் ஈழத்திற்கு வந்தனர். ஈழத்தின் இரசனைத் திறனைக் கண்டு 'கல்கி' ஆசிரியர், 'இலங்கை யாத்திரை' என்னும் கட்டுரைத் தொடரில், இதனைப் பலபடப் புகழ்ந்துள்ளார்.

* * *

# 1941 - 50

இந்தப் பத்து வருட காலத்தை ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் காலம் எனக் குறிப்பிடுதல் மிகவும் பொருத்தமுடைத்து. சரியாக வரையறுத்துச் சொல்வதானுல், 1938 ஆம் ஆண்டிற்கும் 1945 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைக் குறிப்பிடவேண்டும். இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்துகொண்டிருந்த இவ்வேளையில், ஈழத்து இலக்கிய மறுமலர்ச்சி ஏற்பட்டது கவனிக்கத்தக்கது. யுத்தத்தின் தீமைகளைப்பற்றிப் பக்கம் பக்கமாக எழுதலாம். ஆனுலும், யுத்தம் நாட்டுப் பற்றினையும், எழுச்சியினையும் உண்டாக்குகின்றது என்பதை மறுக்க முடியாது.

கணேசையரவர்களது தொல்காப்பிய எழுத்ததிகார உரை விளக்கக் குறிப்பு, சுவாமி ஞானப்பிரகாசரது சொற்பிறப்பு—ஒப்பியல் தமிழ் அகராதியின் முதற் பாகங்கள், வித்துவான் சுப்பையா பிள்ளையினுடைய தஞ்சைவாணன் கோவை விளக்கவுரை, கலைப் புலவர் க. நவரத்தினம் எழுதிய தென்னிந்திய சிற்ப வடிவங்கள் ஆகிய சிறப்பு வாய்ந்த நூல்களெல்லாம் இக்காலத்தேதான் வெளிவந்தன.

இக்கால எல்லையில் தமிழ் மட்டும் படித்தவர்களுடன்—பண்டித, வித்துவான்களுடன்—ஆங்கிலம் படித்தவர்களும் எழுத்துத் துறைக்கு ஆர்வத்துடன் வந்தார்கள். கதாசிரியர்களும், நகைச்சுவைக் கட்டுரையாளர்களும், நடைச்சித்திரம் எழுதுவோர்களும், கவிஞர்களும் தத்தமது துறைகளிலே தமது கைவண்ணத்தைக் காட்ட முற்பட்ட காலம் இஃதாகும்.

இக்கால எல்லையுள் நடைபெற்ற இலக்கிய முயற்சிகள் மிக விரிந்தனவாகும். எனவே, சில உப பிரிவுகளை வகுத்துக்கொண்டு எழுதுவதுதான் சௌகரியமான உபாயமாகும். 'முன்னோடிகள்' மறுமலர்ச்சி எழுத்தாளர், நாட்டுப் பாடல்கள், பண்டித வர்க்க எழுத்தாளர், மலர்கள், மட்டக் களப்பிலே துளிர்த்த ஆர்வம் என்கிற ஆறு உப தலைப்புகளுக்குள் இக்காலத்தின் இலக்கிய வளர்ச்சியை அடக்க விழைகின்றேன். இந்தப் பகுப்பு முறை வரலாற்றினை இலகுபடுத்திச் சொல்வதற்கேயன்றி, தரம் பிரிப்பதற்கன்று. இப்படி வகுத்து எழுதினாலும், ஒரே காலத்தின் இலக்கிய முயற்சி என்கிற இழை இவற்றினை ஒன்று சேர்ந்துப் பிணைப்பதை அவதானிக்கலாம்.

## முன்னோடிகள்

முன்னோடிகள் என்கின்ற விருதுடன் அறுவரைக் குறிப்பிடலாம். விசேடமென்னவென்றால், ஐவர் ஆங்கிலப் பயிற்சியுடன் தமிழ் எழுத்துத் துறைக்கு வந்து இன்றளவும் ஒளி வீசிக்கொண்டிருப்பவர்கள்.

இக்கால எல்லையுள் வாழ்ந்த இளைஞர்கள் துடிப்பும், தேசாபிமானமுங் கொண்டவர்கள். தமிழ்

நாட்டிற்கு நாம் எவ்வகையிலும் பின்தங்கிவிடலாகாது என்கிற உணர்ச்சி மிக்கவர்கள். தற்காலத்தில் வாழும் சில எழுத்தாளர்களைப்போல, 'அவருக்கென்ன தெரியும்?' எனத் தலைக்கனம் கொள்ளாமல், தமிழை முறையாகப் படித்தவர்களை மதித்தும், புதிது புதிதாக அறியவும், ஆக்கவும் ஆவல் கொண்டிருந்தார்கள். இப்பண்புகளினாலேதான் அவர்களது புகழ் இன்றளவும் ஈழத்துத் தமிழ் கூறும் நல்லுலகில் நின்று நிலவுகின்றது.

ஆங்கிலம் படித்து ஆற்றலிலக்கியத் துறையிற் குதித்த ஐவரும், தமிழில் வெவ்வேறான துறைகளிலே தங்களுடைய சத்திகளை வெளியிட்டிருக்கிறார்கள் என்பது எனது அபிப்பிராயமாகும்.

சோமசுந்தரப் புலவரது மகனாகப் பிறந்து, கவிதையையே மூச்சாகக்கொண்டு உழைக்க, **சோ. நடராசன்** அவர்கள் முன்வந்தார்கள். தாகூர், இராதாகிருஷ்ணன் போன்ற அறிவுலக மேதைகளின் நாடகங்களையும், கட்டுரைகளையும் 1936 ஆம் ஆண்டிலேயே மொழி பெயர்த்துத் தமிழ் வாசகரின்முன் வைத்தார்கள். புராதன கால இலங்கை, இந்தியா சம்பந்தமான ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். **'கற்சிலை'** போன்ற சிறு கதைகளையும் எழுதினார். இவ்வாறு பல்வேறு துறைகளிலும் தனது எழுத்தாற்றலைச் செலவு செய்திருப்பினும், கவிதைத் துறையிலேதான் மகத்தான வெற்றியை ஈட்டினார். **'மருதக் கலம்பகம்'** அவருடைய படைப்புகளில் உயர்ந்தது. காளிதாசரது **'மேக தூத'**த்தையும், தாகூரின் **'கீதாஞ்சலி'**யையும் தமிழிலே தந்துள்ளார். ஆரம்ப காலத்தில், அவரது கவிதைகளிலே கவிதா காம்பீரியம் நிமிர்ந்து நின்றது. பிற்காலத்தில், அவர் பாடிய பாடல்களிற் சில அங்கதச்சுவை

மிகுந்தும், உட்பொருள் தெளிவற்றுமிருப்பதாகச் சில விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்கள். தம் மொழி அலுவலகத்தில் உயர் பதவி வகிக்கும் அவர், மொழி பெயர்ப்பினைத் தொழிலாகவும், இலக்கியப் பணியாகவும் வரித்துவிட்டார்போலும்! பல நூல்களைத் தமிழாக்கியுள்ளார். அவற்றுள் 'இதோபதேசம்' ஆயிரம் ரூபா பரிசு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவர் சிங்களத்திலிருந்து தமிழாக்கிய 'பூவை விடுதூது' ஒரு நல்ல முயற்சி. சமீப காலத்திற் பல புனைபெயர்களில் விமர்சனத்துறையிற் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அவருடைய துணிச்சலைப் பாராட்டும் அளவிற்கு, விமர்சனத் துறைக்கு அவர் கையாளும் தெளிவற்ற வசன நடையைக் குறை கூறுவோரும் உளர். நாடகத் துறையில் அவர் சாதித்தவை குடத்துள் விளக்காக இருக்கின்றன.

ஈழத்துச் சிறுகதைத் துறையிலே, சுயா, பாணன், ஆனந்தன் எனப் பலர் முன்னரே எழுதத் தொடங்கியிருந்தாலும், நவீன சிறுகதை உத்திகளைக்கொண்ட, கவர்ச்சிகரமான படைப்புகளைப் படைத்து, ஈழத்தின் சிறுகதைத் துறைக்கு வழி காட்டிய முதல்வர் என்கிற பெருமையைச் சம்பாதித்திருப்பவர் சி. வைத்திலிங்கம் அவர்களே.

இந்தச் சந்தர்ப்பத்தில், ஈழத்துச் சிறுகதை முயற்சிகளின் வரலாற்றினைத் தொட்டுக்காட்டுவது நன்று. மேலை நாட்டுச் சிறுகதை உருவங்களிலே நமக்குப் பயிற்சி ஏற்படுவதற்கு முன்னர், பண்டிதர் சந்தியாகோ சந்திரவர்ணம் பிள்ளை அவர்கள், 'மரியாதை இராமன் கதை', 'கோமுட்டி கதை', 'மூடர் கதை' முதலிய ஏழு கதைகளடங்கிய 'கதாசிந்தாமணி'

என்னும் சிறுகதைத் தொகுதியை 1875 ஆம் ஆண்டில் வெளியிட்டார். இது சிவில் சேவையாளருக்குப் பயன்படுத்தப்பட்டது. இதனையடுத்து, ஊர்க் கதைகள் நூற்றியொன்றைத் தனது நடையில் எழுதித் தம்பி முத்துப்பிள்ளை புலவரும், 'ஹைதர் ஷா சரித்திரம்' என்னும் சிறுகதைத் தொகுதியை ஐதுரூஸ் லெப்பை மரைக்காரும் வெளியிட்டார்கள். இவ்வாறு வெளிவந்த சிறுகதைத் தொகுதிகளிலே 1938 ஆம் ஆண்டில் வெளிவந்த செ. சந்திரபால கணேசன் எழுதிய 'நற்பவளத் திரட்டு' என்னுஞ் சிறுகதைத் தொகுதி விசேடமாகக் குறிப்பிடத்தக்கது. இந்தக் குறிப்பீடு அதன் நடைக்காகவோ, கதை சொல்லப்படும் உத்தி முறைக்காகவோ அன்று. இக்காலத்திலே சாதிப் பிரச்சினைகளைப்பற்றியும், சர்வதேச அரசியலில் ஏற்படும் நெருக்கடிகளைப் பற்றியும் கதைகள் புனைவதுதான் முற்போக்கான இலக்கியப்பணி என்று ஒரு குரல் கேட்கின்றது. தீண்டாமை ஒழிப்பு, சீதனக் கொடுமை, மது ஒழிப்பு ஆகியனபற்றியும், இத்தாலியில் முசோலினி செய்த அட்டூழியங்களைப் பற்றியும் இத்தொகுதியிலே கதைகள் உள்ளன என்பதை நிச்சயம் குறித்துக் காட்டவேண்டும்.

ஆனல், மேனுட்டு உத்திமுறைப் பயிற்சியுடன், சிறுகதைகளுக்குத் தற்கால வண்ணக் கோலங் கொடுத்ததில் சி, வைத்திலிங்கம் முன் வரிசையில் முதல்வராக நிற்கின்றார். கலைமகளையும், கு. ப ரா. வின் பாணியையும் மனதில் வைத்துக்கொண்டு அவர் தனது கதைகளைப் படைத்தார் என்று 'தேசிய இலக்கியம்' பற்றிப் பேசுபவர்கள் குறைபடுகின்றார்கள். இருப்பினும், கிராமப் புறங்களின் வர்ணனைகளும், களனி ஆற்றங்கரை

வர்ணனைகளும் ஈழநாட்டிற்கே உரியவை. கதையின் கருவுக்கேற்ற பகைப் புலத்தினை வீச்சுடனும் வளத்துடனும் அமைத்து, கலைத்துவம் ததும்புஞ் சில அழகான சிறுகதைகளை எழுதியிருக்கின்றார். கதையின் கடைசிப் பகுதியிலே — இறுதி வசனத்திலே — திருப்பும் வியப்பு முடிவுக் கோட்பாட்டினை ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு ஓரளவு வெற்றியுடன் அறிமுகப்படுத்தி வைத்திருக்கின்றார். எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் இருபத்தைந்து சிறுகதைகளைத் தானும் எழுதாத இந்தச் சிறுகதைச் சிற்பியை இன்றுங்கூட எழுத்துலகம் போற்றுகின்றதென்றால், இவரது கதைகளின் வலிமைக்கு வேறு சான்றுகள் தேவையில்லை. வடமொழிப் பிரேமையினால் வட சொற்கள் இவரது கதைகளிலே மிகுதியென்று குறைப்படுவோருமுளர். மூன்றாம் பிறை, கங்கா கீதம் என்பன முறையே தமிழ் நாட்டு, ஈழநாட்டுச் சிறுகதைத் தொகுதிகளிலே இடம் பெற்றிருக்கின்றன. இவற்றுடன் பாற்கஞ்சி, நெடு வழி ஆகிய கதைகளும் வாழக்கூடிய வளம் மிக்கவை.

''இலங்கையர்கோன்'' பிற நாட்டு நல்ல சிறுகதைகளையும், நாடகங்களையும் மொழிபெயர்த்துத் தமிழ் வாசகர்களுக்கு உதவினார். இலங்கைச் சரித்திரக் கதைகளையும், பழங்காலப் புராணக் கதைகளையும் மெருகிட்டுப் புதிய சிறுகதைகளாக்கினார். சரித்திர நாடகங்களையும், இலக்கிய நாடகங்களையும் எழுதினார். நாடகங்களின் தன்மைக்கு ஏற்ப செய்யுள் நடையையும், சாதாரண வழக்கு நடையையுங் கையாண்ட புதுமையை இவரது எழுத்துக்களிலே காணலாம். பின்னர், பத்து வருட காலத்தை வானொலி நாடகங்களை எழுதுவதிலேயே

செலவு செய்தார். காரியாதிகாரியாகக் கடமை பார்த்த அனுபவத்தை வைத்துக்கொண்டு எழுதிய 'விதானையார் வீட்டில்' என்கிற தொடர் நாடகம் வானொலிப் பிரியர்களிடம் நற்பெயர் பெற்றது. மேடை நாடகங்களே வாழத்தக்கன; அவற்றிற்கு உயிரூட்டுதல் வேண்டுமென்று சங்கற்பஞ் செய்து கொண்டு எழுத நினைத்த காலையில் அகால மரண மெய்தினர்.

மொழி பெயர்ப்பிலும், நாடகத்திலும் 'இலங்கையர்கோன்' பெற்ற வெற்றியைச் சிறுகதைத் துறையில் ஈட்டவில்லை யென்று கருதுவோரும் உளர். இருப்பினும், காலத்திற்குக் காலம் வளர்ச்சித் தடத்திலே மிடுக்குடன் நடந்து, இறக்கும்வரை எழுதிக் கொண்டேயிருந்த பெருமை 'இலங்கையர் கோனை'ச் சாரும். 'வஞ்சம்' அவரது நல்ல கதைகளுள் ஒன்ருகும். 'தேசிய இலக்கியம்' 'மண்வளம்' என்று பிற்காலத்தில் எழுப்பப்பட்ட 'கோஷ'ங்களுக்குப் பொருத்தமான சிறுகதையாகத் திகழும் 'வெள்ளிப் பாதசர'த்தை 1942 ஆம் ஆண்டிலேயே எழுதி விட்டார். மொழி பெயர்ப்பு நாவலாகிய முதற் காதலும், நாடக நூல்களாகிய மிஸ்டர் குகதாசன், மாதவி மடந்தை ஆகியனவும் அவரது காலத்திலேயே வெளி வந்தன. தந்தை மனம், கடற்கரைக் கிளிஞ்சல் என்னுஞ் சிறுகதைகள் தமிழ் நாட்டு, ஈழ நாட்டுச் சிறுகதைத் தொகுதிகளிலே இடம் பெற்றிருக்கின்றன. அன்னரின் சிறுகதைகள் சில அடங்கிய 'வெள்ளிப் பாதசரம்' என்னுந் தொகுதியை அவரது மனைவியார் வெளியிட்டுள்ளார். 'விஜய குமாரன்' 'விடியாத இரவு' முதலிய நாடகங்கள் நூலுருப் பெற்று வெளிவந்தால் அவருடைய புகழ் நின்று துலங்கும்.

சோ. சிவபாதசுந்தரம் தெளிந்த கட்டுரையாள ராவர். 'தோட்டத்து மீனுக்ஷி' 'அழைப்பு' முதலிய கதைகளை 'ஆனந்தவிகட'னில் எழுதியிருந்தாலும், அவருடைய பிரயாணக் கட்டுரைகளும், விமர்சனங் களுமே வாசகரை ஆட்கொண்டன. பெரியவர், படித்தவர், புகழ் பெற்றவர், நட்பாளர் என்று பாராமல், தாம் பிழையெனக் காணுவதை நேர்மை யாய்த் தலைநிமிர்ந்து எழுதிய பெருமை அவருக்கு உண்டு. போற்ற வேண்டியவற்றைப் போற்றப் பின்நிற்பவருமல்லர். சந்தர்ப்பங் கிடைத்த பொழு தெல்லாம், ஈழத்து இலக்கிய முயற்சிகளின் மர பினையுந் தரத்தினையும் வாழ்த்தியவர். கோவில் களில் நடைபெறும் மேளக் கச்சேரிகள் நமது மதிப் பினை இழந்திருந்தபொழுது, அக்கலையின் நுட்பத் தைப்பற்றி அவர் எழுதிய இரசனைக் கட்டுரைகள், அக்கலைஞர்களுக்குப் புதிய உற்சாகத்தையும், ஊக் கத்தையுங் கொடுத்தன.

தமிழ் மொழியில் மட்டுமே பயிற்சிபெற்றிருந்த ஆசிரியர்களையும், மாணவர்களையும் உற்சாகப் படுத்தி, ஆலோசனைகள் நல்கி, எழுத்துலகிற்குக் கொண்டு வந்த பெருமையும் அவரைச் சாரும். மாணிக்க வாசகர் அடிச்சுவட்டில், ஒலி பரப்புக் கலை (சென்னைப் பரிசு பெற்றது), புத்தர் அடிச்சுவட்டில் (ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது) ஆகிய மூன்று பெரிய நூல்களும் அவரது எழுத்து வன்மைக்குச் சான்ருக இருக்கின்றன. 'காஞ்சனை' என்னும் அவரது சிறு கதை தமிழ் நாட்டுச் சிறு கதைத் தொகுதியில் இடம் பெற்றிருக்கின்றது.

கவிதை - சிறுகதை - மொழிபெயர்ப்பும் நாடகமும் - கட்டுரை ஆகிய நான்கு துறைகளிலும் வழி காட்டிய இந்த நால்வருடனும், 'சம்பந்தன்', குல சபாநாதன் ஆகிய இருவரையுஞ் சேர்த்துத்தான் முன்னேடிகள் அறுவராஞர்கள்.

'சம்பந்தன்' தமிழாசிரியராகப் பணி புரிந்து கொண்டு, சிறுகதைத் துறையில் பெருவெற்றியீட்டியவராவர். 'விதி', 'புத்தரின் கண்கள்' ஆகிய கதைகள் 'கலைமக'ளிலே வெளிவந்த காலத்திலேதான் எழுத்துலகம் அவரது திறமையை அறியலாயிற்று. தேர்ந்தெடுத்த சொற்களை வைத்துக்கொண்டு, ஓரிரண்டு பாத்திரங்களையே நடமாடச் செய்து, அற்புதமான சிறுகதைகளைப் படைக்குங் கலை அவரிடம் இலாவகமாக அமைந்துள்ளது. 'பாசம்' என்கிற அவரது நாவலிலும், சிறுகதைகளிலும் வரும் பாத்திரங்களின் பெயர்களும், நிலைக்களங்களும் ஈழத்தைப் பிரதிபலிப்பனவாக அமையவில்லையென்று குறைகூறுவோரும் உளர். அவரது படைப்புக்களிலே வட சொற்களும், சாதாரணமான வாசகருக்கு விளங்காத சொற்களும் மிகுதியாகக் காணப்படுகின்றன என்பது உண்மையேயாகும். இருப்பினும், எண்ணிக்கையில் நம்பிக்கை வைக்காது, தரம் ஒன்றினையே குறிக்கோளாகக்கொண்டு, தான் எழுதுஞ் சிறுகதைகளை அழகாக எழுதுகின்ருர் என்கிற புகழுக்கு உரியவர். 'விதி', 'மனிதன்' ஆகிய அவரது கதைகள் தமிழ் நாட்டு, ஈழ நாட்டுச் சிறுகதைத் தொகுதிகளில் இடம் பெற்றிருக்கின்றன. அவருடைய சிறுகதைத் தொகுதியொன்றும் காவியமொன்றும் சமீபத்தில் வெளிவர இருக்கின்றன. அவை ஈழத்தின் புகழை நிச்சயம்

நிலை நிறுத்தும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இக்கால எல்லைக்குச் சற்று முன்னராகப் புகழ் மிக்க ஆராய்ச்சியாளராக விளங்கிய முதலியார் இராச நாயகம் ('யாழ்ப்பாணச் சரித்திரம்' என்கிற நூலின் ஆசிரியர்)அவர்களின் அடிச்சுவட்டில், குல. சபாநாதன் பணிபுரிகின்றார். பழைய புலவர்களைப்பற்றிய சீவிய சரித்திரங்களையும், ஈழத்தின் ஆலயங்களைப்பற்றிய வரலாறுகளையும், பழைய நூல்களிலே காணப் படும் மிக உபயோகமான குறிப்புக்களையும், நல்ல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார். கதிர்காமம், நயினை நாகேஸ்வரி ஆகிய அழகிய நூல் களும், யாழ்ப்பாண வைபவமாலைப் பதிப்பும் அவரது பெயரை நிலைநாட்டப் போதுமானவையாக இருக் கின்றன. 'ஸ்ரீ லங்கா' என்கிற அரசினர் சமாசாரப் பத்திரிகையை இலக்கியத் தரத்திற்கு உயர்த்திய பெருமையும் அவரைச் சார்ந்தது.

தற்கால எழுத்தாளர்களின் முன்னோடிக ளென்று மேலே குறிப்பிட்ட அறுவரையுஞ் சொல் லுதல் மிகவும் பொருத்தமானது. இந்த அறுவருடன், இன்னொருவரையும் முன்னோடியாகக் குறிப்பிட வேண்டும். 'சுயா' என்னும் புனை பெயருக்குள் ஒளிந்திருக்கும் சு. நல்லையா அவர்கள், ஒரு தமிழா சிரியராக இருந்தும், அக்கால இரசனைக்கேற்ற நகைச்சுவைக் கட்டுரைகளை யாழ்ப்பாணப் பழகு தமிழில் எழுதி, தனக்கென ஓர் இடத்தினைப் பெற் றுள்ளார். இவர் பல சிறுகதைகள் எழுதியிருப் பினும், அவை இவரது நகைச் சுவைக் கட்டுரைகள் பெற்ற வெற்றியைப் பெறவில்லை. பிற்காலத்திலே ஒரு நீண்ட தொடர் நாவலைத் 'தினகர'னில் எழுதி யுள்ளார். கடந்த பத்து வருட காலமாக

எழுத்துலகிலிருந்து ஒதுங்கி வாழ்வதற்குக் காரணம் விளங்கவில்லை.

இவர்கள் யுத்த காலத்தின் கெடுபிடிக்குள் உலகம் அவதிப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் எழுதிய எழுத்துக்களை, பதினேழு வருடங்களின் பின், நிதானித்து அசைபோட்டு வாசிக்கும் பொழுது, சில உண்மைகளை உணர முடிகின்றது. தமிழ் நாட்டு எழுத்தாளர்களான கு.ப ரா., 'கல்கி' ஆகியோரது எழுத்தின் ஆதிக்க நிழல் இவர்களுடைய எழுத்துக்களில் கவிந்திருக்கின்றது. 'கலைமக'ளையும் 'ஆனந்தவிகட'னையும் இலட்சியப் பத்திரிகைகளாக வைத்துக்கொண்டு எழுதிய தன்மையைக் கவனிக்க முடிகின்றது. யதார்த்த இலக்கியகாரரின் கருப்பொருள்களாகிவிட்ட வறுமை, பசி, முதலாளி - தொழிலாளிப் போராட்டங்கள் சூசகமாகவே கையாளப்பட்டன. பிரசாரத்தின் வேகம் கலைக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவர்கள் கையாண்ட நடையில் ஒரு செழுமையும் பூரணத்துவமும், வாசித்து முடித்த பின் ஓர் இன்பமான அமைதியை அளிக்குந் தன் மயக்க நிலையும் இருந்தன என்பதை நாம் மறுக்க முடியாது.

முன்னோடிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உரிய இடத்தினை மறுக்கும் 'புதுமை' விமர்சகர்கள், அவர்களுடைய எழுத்துக்கள் கனவுலக எழுத்துக்களாகவும், மேற்றட்டு இலக்கியங்களாகவும் இருந்தன எனக் குறைகூறுகின்றார்கள். இந்த விமர்சகர்களின் குரலாக, 1955 ஆம் ஆண்டு, மார்கழி மாதத்தில் வெளிவந்த ''ஈழத்துத் தமிழ் இலக்கியம்'' என்னுங் கட்டுரை அமைந்திருப்பதைக் காணலாம். மேனாட்டு இலக்கிய விமர்சன

முறையினைத் தமிழிலே திணிக்க முன்வந்துள்ள மேற்படி கட்டுரை ஆசிரியர் பின்வருமாறு எழுதுகின்றார் :

> 'குல. சபாநாதன், சோ. சிவபாதசுந்தரம், சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோர் ஈழகேசரிக் குழுவினர் என்று கூறக்கூடிய வகையில் இலக்கிய முயற்சியில் ஈடுபட்டனர் எனினும் இன்று, அக்கால இலக்கிய முயற்சிகளைப் பின்னோக்கிப் பார்க்கும்பொழுது, மேற்கூறிய இலக்கிய கர்த்தாக்கள் மறுமலர்ச்சி இலக்கியத்தையோ - இலக்கியத்தின் உட்பிரிவுகளையோ, புதிய புதிய பரிசீலனைகளையோ அதிகம் வளர்த்தனர் என்று கூறுவதற்கில்லை. ஆங்கில விமர்சகர்கள் கூறும் 'ரோமான்டிசம்' என்னும் கனவுலகக் காட்சிகளில் ஈடுபடச் செய்யும் இலட்சிய பூர்வமான சிந்தனைகளிலும் உணர்ச்சிகளிலும் மயங்கி எழுதினர் என்றுதான் சொல்லலாம்.'

தமிழ் இலக்கிய விமர்சன முறையைப்பற்றி முடிவுபெறாத கருத்து மோதல்கள் நடைபெற்று வருகின்றன. கலை விவகாரத்தில் ஒரு வழிதான் பொருந்தும் என வாதாடுவது முறையா? 'நூறு மலர்கள் மலரட்டும்!' என்கிற கோஷம் இப் புதுமை விமர்சகர்களின் அரசியல் ஆசானுற் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்படி விட்டெறிந்து அபிப்பிராயங் கூறுதல் அறிவு சார்ந்த செயலாகாது. ஒவ்வொரு தனித்தனி எழுத்தாளர்களது படைப்பையும் ஆராய்ந்து மதிப்புக் கூற வேண்டுமேயல்லாது, ஒட்டு மொத்தமாகக் கூறும் விமர்சனம் சரியானதாகமாட்டாது. சிறுகதை -

நாவல் - நாடகம் ஆகிய படைப்புத் துறைகளிலே மேனாட்டு உத்தி முறைகளிற்கூடக் காலத்திற்குக் காலம் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இன்று சிலராற் பழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ள விமர்சன அளவுகோல்களால் ஈழத்து முன்னோடிகளின் படைப்புக்களை மதிப்பிடுவது பொருத்தமானதன்று.

அவர்களது படைப்புக்கள் என்கிற படிக்கற்களிலே ஏறித்தான், இலக்கிய வளர்ச்சிக் கோபுரத்தை நாம் அடையலாம். மேலும், இக்கால எல்லையுள் எழுந்த குவேனி, அனுலா, விஜயன், பூதத்தம்பிக் கோட்டை, சிகிரியா, யாழ்ப்பாடி ஆகிய சரித்திரக் கதைகளிலேயுள்ள அழகும் கலைத்துவமும் தற்கால எழுத்தாளரது சரித்திரக் கதைகளிலே காண முடியாததாகவிருக்கின்றது. 'சுயா' 'அநுசுயா' 'சாணா' ஆகியோர் எழுதிய 'யாழ்ப்பாண நடை'க் கட்டுரைகளின் தரத்திற்கு, 'மண்வளம்' பற்றி வானளாவப் பேசப்படும் இக்காலத்திற்கூட ஒருவரும் எழுதவில்லை. இந்த வெற்றிகளையும் நாம் மனதிலிருத்திக் கொள்ளுதல் நன்று.

## 'மறுமலர்ச்சி' எழுத்தாளர்

எழுத்துலகத்திற் புகுந்து தமது படைப்புத் திறமைகளை வெளிக்காட்ட வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தவர்களும், 'ஈழகேசரி' இளைஞர் பகுதியிற் சேர்ந்து, சிவபாதசுந்தரம் அவர்களால் உற்சாகப்படுத்தப்பட்டவர்களுமான இருபது, இருபத்தைந்து இளைஞர்கள் 1942ஆம் ஆண்டளவில் ஒரு சங்கத்தைத் துவக்கினார்கள். அதற்கு எழுத்தாளர் சங்கம் என்று பெயர்

சூட்டப்படாவிட்டாலும், அதுதான் ஈழத்திலே தோன்றிய முதலாவது தமிழ் எழுத்தாளர் சங்கமாகும். **'மறுமலர்ச்சிச் சங்கம்'** என்னும் பெயருடன் அது சிலகாலந்தான் இயங்கினுலும், குறிப்பிடக்கூடிய சேவையைச் செய்தது. மறைந்த சிறுகதை மன்னனுகிய கு. ப. ரா. வின் குடும்ப நிதிக்கு அது பணஞ் சேகரித்து அனுப்பியது. இஃது எழுத்தாளர் குடும்பத்தின் துயர் துடைக்கும் துடிப்பான செயலாகும். சுவாமி விபுலாநந்தர் அவர்களுக்கு வரவேற்பளித்தது. **நவசக்தி ஆசிரியர் சக்திதாஸன் சுப்பிரமணியம்** அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தபொழுது, அச்சங்கம் அவரைக் கௌரவித்தது. பாரதி விழா - கம்பர் விழா ஆகியவற்றைக் கொண்டாடியதுடன், மாதாமாதம் கருத்தரங்குகளையும் நடாத்திற்று. எல்லாவற்றிற்கும் மேலாக, அதன் சார்பில் ஒரு கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்பட்டது. யுத்த காலத்திற்குப் பிற்பட்ட கால எல்லையுள் அச்சுவாகனம் ஏறி மிகப் பயன் தரும் இலக்கிய பரிசோதனைக் களம் அமைத்துக் கொடுத்த 'மறுமலர்ச்சி'ப் பத்திரிகைதான் அச்சங்கம் கையெழுத்துப் பத்திரிகையாக நடாத்திய சஞ்சிகையாகும்.

மறுமலர்ச்சிச் சங்கத்துடனும், மறுமலர்ச்சிப் பத்திரிகையுடனும் தொடர்பு கொண்டு முன்னேறிய எழுத்தாளர்களைத்தான் 'மறுமலர்ச்சி' எழுத்தாளர்களென்று குறிப்பிடுகின்றேன்.

பொருத்தமான பெயருடன் 'மறுமலர்ச்சி' என்ற பத்திரிகை வெளிவரலாயிற்று. தனது இரண்டு வருட ஆயுட் காலத்திற்குள், அது புதிய பல எழுத்தாளர்களை உருவாக்கியது. இவ்வெழுத்

தாளர்களுட் பலர் இப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றூர்கள். அவர்களுள், சிறுகதைத் துறையிலே அ. செ. முருகானந்தன், சு. வேலுப்பிள்ளை, அ. ந. கந்தசாமி, தி. ச. வரதராசன், சு. இராஜநாயகன், தாழையடி சபாரத்தினம், 'சொக்கன்' என்பவர்களைக் குறிப்பிடலாம். அவர்களது படைப்புகளைப் பற்றி ஈழத்துப் பேனுமன்னர்கள் வரிசையில் விமர்சனஞ் செய்துள்ளேன். இருப்பினும், இங்கே அவர் களுடைய படைப்புகளைப் பற்றிச் சிறிது குறிப்பிட வேண்டியிருக்கின்றது.

முருகானந்தன், சரியான யாழ்ப்பாணக் களமும், பண்பாடும், கருவுங் கொண்ட கதைகளைப் படைத்துப் புகழீட்டினூர். சவாரிக்காட்சியும், நீதிமன்ற வழக்குகளுங்கொண்ட 'புகையில் தெரிந்த முகம்' என்னும் அவரது குறுநாவல் மிகுந்த பாராட்டுதல் களைப் பெற்றது. பல பத்திரிகைகளிலே உழைத்துக் களைத்து, பதினைந்து ஆண்டுகளின் பின், 'யாத்திரை' என்னும் நாவலையும், ஈழத்து இசை யாளர்களைப் பற்றிய தொடர் கட்டுரைகளையும் எழுதி, தன்னை மறந்திருந்த வாசகருக்குத் தன்னை நினைவூட்டினூர். சரியான தூண்டுதலும், நல்ல சூழ்நிலையுமிருந்தால் சிறந்த சிறுகதைகளைப் படைக்கக் கூடிய திறமைசாலி என்பதை அவரது சிறுகதை கள் பறைசாற்றி நிற்கின்றன. மனிதமாடு என்னும் அவரது கதை தமிழ்நாட்டுச் சிறுகதைத் தொகுதி யில் இடம் பெற்றிருக்கிறது. 'வண்டிச் சவாரி' என்கிற அவரது சிறுகதை குறிப்பிடத்தக்க நல்ல கதையாகும்.

தற்காலத்திலே, தங்களை முற்போக்கு எழுத் தாளர் என்று சொல்லிக்கொண்டிருப்பவர்களுக்கு

முன்னேடியாக அ. ந. கந்தசாமி விளங்கினுர். கதைத் துறையிலே வெற்றியீட்டத் தவறினுலும், 'இரத்த உறவு' என்னும் கதை, அவரது அரசியற் போக்கினைக் காட்டும் வகையில் அமைந்திருக்கின்றது. கவிதை எழுதும் ஆற்றல் அவரிடமுண்டு. 'கவீந்திரன்' என்ற புனைபெயரில் 'துறவியும் குஷ்டரோகியும்' போன்ற சில நல்ல கவிதைகளை எழுதியுள்ளார். பல பத்திரிகைகளிலே கடமையாற்றித் தமது அணியிலுள்ள இளைஞர்களை உற்சாகப்படுத்தியவர். பலசுவைக் கட்டுரைகளை எழுதியிருக்கின்ருர். ஏதாவது பிரச்சினையைக் கிளப்ப வேண்டுமென்கிற தொனி சில கட்டுரைகளிலே மேலோங்கி நிற்கின்றது. அரசினர் சமாசாரப் பகுதியிலிருந்து, வயது எல்லைக்கு முன்னர் ஒய்வு பெற்ற பின்னர், கேலிக் கவிதைகள் பாடுவதிலும், பிரச்சினைக்காகவே பிரச்சினைக் கட்டுரைகள் எழுதுவதிலும் திறமையை வீணுக்கிக்கொண்டிருக்கின்ருர். அவர் தமது முழுச் சத்தியையும் ஒருங்கு கூட்டி நிலை பெறத் தக்க நாவல் - காவியம் - இயற்றவேண்டும். அப்போது தான் அவர் பெயர் நின்று நிலைக்கும்.

வாலிப உந்துதல்களுடன், காதலின் பலவகைக் கோலத்தையும், காமத்தையும் வைத்துச் சிறுகதைகளைப் படைத்துத் தமது எழுத்தினுல், தி. ச. வரதராசன் (வரதர்) வாசகர்களை மயங்கச் செய்தார். இளம் எழுத்தாளர்களுக்கு உற்சாகமூட்டக் கூடியதாக மறுமலர்ச்சி, ஆனந்தன், தேன்மொழி (கவிதைப் பத்திரிகை), புதினம் ஆகிய பத்திரிகைகளைக் காலத்திற்குக் காலம் நடாத்திப் பார்த்தவர். 'வாழ்க நீ சங்கிலி மன்ன!' என்னும் வரலாற்று நூலை எழுதி

யுள்ளார். வள்ளி, இலக்கிய வழி, மூன்றுவது கண், சிலம்பொலி ஆகிய நூல்களைத் தமது வரதர் வெளியீடு மூலம் வெளியிட்டு எழுத்தாளர்களை ஊக்குவித்திருக்கின்றுர். அதிக கால இடைவெளிக்குப்பின் காதல், கற்பு, வீரம் ஆகிய விடயங்களுக்குப் புரட்சிகரமான போக்கில் 'கரு' சமைத்துப் பழையபடியுந் தமது இடத்தைத் தாபித்து, 'கயமை மயக்கம்' என்னுஞ் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார். 'மூர்த்தி மாஸ்டர்' பெரும்பாலான கதைகளிலும் நடமாடும் சுயபிம்பங் காட்டும் ஒரு பாத்திரமாகும்.

உருவகக் கதை என்கிற கடினமான கதை சொல்லுந் துறைக்குட் புகுந்து, முதலாவது வெற்றியை ஈட்டிய பெருமை சு. வேலுப் பிள்ளை [சு. வே.] யைச் சாரும். பாரதரத்தினம் சக்கரவர்த்தி இராஜ கோபாலச்சாரி (ராஜாஜி) அவர்களாற் புகழப்பட்ட 'மணற்கோவி'லையும், வாசகர் பலராற் பாராட்டப் பட்ட 'வெறுங்கோவி'லையும் எழுதித் தான் ஒரு பண்பாடான, சிந்தனை மிக்க ஓர் எழுத்தாளர் என்பதை நிலை நாட்டிவிட்டார். இவருடைய வர்ணனை அழகுகள், கற்பனை நயங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தன. நடையிலே சுத்தமும் ஓட்டமும் உண்டு. பாற்காவடி, மண்வாசனை போன்ற பல நல்ல சிறுகதைகளை எழுதி, தாம் ஒரு சிறுகதையாசிரியர் என்பதையும் நிரூபித்துள்ளார். ஈழத்தின் ஐந்து எழுத்தாளர் சேர்ந்து எழுதிய 'மத்தாப்பு' என்னுங் குறுநாவலின் நடுநாயகமான அத்தியாயத்தை வாசித்தவர்கள், அவருக்கு நாவல் துறையும் நேர்த்தியாக வருமென்று அபிப்பிராயப்படுகின்றுர்கள். இராமாயணப் பாத்திரமான குகனை வைத்து இவர் எழுதியுள்ள 'குக'னும் 'சந்திரமதி'யும் உப பாடப் புத்தகங்களாகையினுல், இலக்கியக் கணக்கெடுப்பிலிருந்து வழுவிவிட்

டன. அண்மையில் அவரது '40 கட்டுரைகள்' என்னும் நூல் வெளிவந்துள்ளது. அவரது கட்டுரை எழுதும் ஆற்றலுக்கு அக்கட்டுரைத் தொகுதி தகுதியான சான்ருகும்.

'சொக்கன்' தமது கதைகளுக்கும், நாடகங்களுக்குமான விடயங்களைப் பெரும்பாலும் இலங்கைச் சரித்திர நூல்களிலே இருந்து எடுக்கின்ருர். இச்சரித்திர நிகழ்ச்சிகளைச் சரித்திராசிரியனின் நேர்மையுடன் அணுகாமல், இலக்கியாசிரியனின் கற்பனை நோக்குடன் அணுகுகின்ருர். அதனுல், அவ்வெழுத்துக்களிலே மனேரதியச் சாலையைச் சேர்ந்த கவர்ச்சி இருக்கின்றது. மலர்ப் பலி, செல்லும்வழி இருட்டு ஆகிய நாவல்களை எழுதியிருக்கின்ருர். சிலம்பு பிறந்தது, சிங்கைகிரிக் காவலன் ஆகிய இரண்டு நாடகங்களுக்குக் கலைக்கழகத்தினரின் முதலாவது பரிசிலை இரண்டு தடைவைகளிற் பெற்றுள்ளார். சிறுகதைகளையும், குறு நாவல்களையும் நல்ல தமிழ் நடையில் எழுதுகின்ருர். இருப்பினும், 'எனக்கு நாடகங்களே எழுத வருகின்றன' என்று சமீப காலத்திற் சொல்லத் தொடங்கியுள்ளார். 'வீரத்தாய்' என்னும் கவிதை நூலையும் படைத்திருக்கின்ருர். மனேன் மணியத்தை வசன நடையில் மாணவர்க்காக எழுதியுள்ளார்.

பிரபல எழுத்தாளரான சம்பந்தனின் அடிச்சுவட்டிலே நடந்து, தரமான சில கதைகளை 'நனவோடை' உத்தியில் எழுதியவர் சு. இராஜநாயகனுவர். உருவகங்களைத் தம் கதைகளிலே அழகாகக் கையாளுகின்ருர். 'அவன்' என்கிற அவரது சிறுகதை ஈழத்துச் சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ளது.

'கல்கி'ப் பத்திரிகை நடாத்திய ஒரு சிறுகதைப் போட்டியில் மூன்ருவது பரிசைப் பெற்றதின்மூலம் பிரபலம் அடைந்து, 'அசுரகதி'யிற் பல சிறுகதை களைப் படைத்து, தாழையடி சபாரத்தினம் வாசகரைக் கவர்ந்தார். ஈழத்துச் சிறுகதைத் தொகுதியில் வெளியான 'குருவின் சதி' பழைய ஏகலைவன் கதை யாக இருந்தாலும், அதன் நடையும், புதுப்பார்வை யும், அதனைத் தரமான கதையாக ஆக்கிவிட்டிருக் கின்றன.

மறுமலர்ச்சி வட்டச் சிறுகதை ஆசிரியர்களை மொத்தமாக நோக்குமிடத்து, வாசகர்கள் அதிகம் பரவியிராத ஒரு காலத்தில், சிறுகதை இலக்கியத் தைப்பற்றி அலசி ஆராய்ந்து அதன் இலட்சணங் கள் தமிழில் வரையறுக்கப்படாத ஒரு நிலையில், மிக இளம் வயதில், தமக்குத் தெரிந்தவற்றை வைத்துக்கொண்டு, ஏதாவது எழுத்துலகிற் செய்ய வேண்டுமென்ற துடிப்புடன் எழுத வந்தவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. ஆனல், பதினெட்டு வருடம் கடந்து அவர்களது வளர்ச்சியையும், வளத் தையும் பார்க்கும்பொழுது, மகிழ்ச்சி தரத்தக்கன வாகவே இருக்கின்றன. கிராமச் சூழ்நிலைக் கதை (அ. செ. மு.), 'முற்போக்கு'க் கதை (அ. ந. கந்த சாமி), காதற்கதை (வரதர்), உருவகக் கதை (சு. வே.), சரித்திரக் கதை (சொக்கன்), 'நன வோடை'க் கதை (இராஜநாயகன்) என அவர்கள் புதிய கிளைப்பாதைகளில் நடந்து முன்னேறினர் கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

"காதல் இல்லாமல் கதை எழுதமாட்டார்கள்" என நையாண்டி செய்யும் படித்தவர்களுக்கு மறு மலர்ச்சி வட்டாரத்துச் சிறுகதை ஆசிரியர்கள்

செய்துள்ள தொண்டு விளங்காதிருக்கலாம். இக்காலத்து இலக்கிய வளர்ச்சியைப் பற்றி ஆராய்ந்த ஒரு விமர்சகர், ''இவர்கள் 'கலைக்காகவே கலை' என்ற கொள்கையிற் தம்மை அறியாமலே புகுந்து விட்டார்கள்'' என எழுதியுள்ளார். இது சரியான மதிப்பீடன்று. இக்கால எல்லையுள் எழுதிய எழுத்தாளர்கள் கொள்கைக் குழப்பங்கள் என்கிற சகதிக்குள் அகப்படவில்லை. ஆனால், எழுத்துத் துறையைப் பற்றிப் பூரண பிரக்ஞை அவர்களுக்கு இருந்திருக்கின்றது.

ஈழத்து எழுத்தாளரை அறிமுகஞ் செய்து வைத்து, அவர்களது படைப்புக்களை வெளியிட்டு முன்னணிக்குக் கொண்டுவரும் பணியில், இக்காலத்தில் வெளிவந்துகொண்டிருந்த 'ஈழகேசரி', 'மறுமலர்ச்சி' முதலிய ஈழத்துப் பத்திரிகைகளே முன்னோடிகளாக விளங்கின. தமிழகத்துப் பத்திரிகைகள் ஈழத்து எழுத்தாளரை மாற்றாந்தாய் மனோபாவத்துடன் நடத்துகின்றன என்று தற்காலத்தில் ஒரு பரவலான அபிப்பிராயம் நிலவுகின்றது. 'கங்கை'யின் ஆசிரியர் பகீரதன் முன்னிலையில் இந்த மனக்குறையை திரு எஸ். பொன்னுத்துரை எடுத்துச் சொன்னதைத் தொடர்ந்து, 'தினகரன்', 'எழுத்து', 'சரஸ்வதி', 'கங்கை' ஆகிய பத்திரிகைகளிலே நடந்த வாதப் பிரதிவாதங்களை நாம் மறப்பதற்கில்லை. மேற்படி குற்றச்சாட்டில் ஓரளவு உண்மை இருக்கின்றது. இருப்பினும், 'கலாநிலைய'மும் அவ்வப்போது 'ஆனந்த விகட'னும் 'கலைமக'ளும், 1942 ஆம் ஆண்டளவிற் 'கிராம ஊழியன்' 1960 ஆம் ஆண்டளவில் 'சரஸ்வதி' ஆகிய பத்திரிகைகளும், ஈழத்து எழுத்தாளரின் படைப்புக்களை வெளி

யிட்டுச் செய்த சேவையை நாம் புறக்கணித்து விட முடியாது.

'கிராம ஊழிய'னைப் பற்றி விசேடமாகக் குறிப்பிட வேண்டும். பிரபல எழுத்தாளராகிய கு.ப.ரா. அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த அப் பத்திரிகை, பிற்காலத்தில் **திருலோக சீதாராம், வல்லிக் கண்ணன்** ஆகியோரின் பொறுப்பில் வெளிவந்தது. அக்காலத்தேதான் ஈழத்து எழுத்தாளர் அப் பத்திரிகையைத் தமது சொந்தப் பத்திரிகையாக உரிமை கொண்டாடினார்கள். ஏனைய பத்திரிகைகள் விசேட மலர்களின் முதற் கட்டுரைக்காக முதல் அமைச்சரையோ, வேறு துறைகளிற் பிரபலமானவரையோதான் தேடிச் சென்றன; செல்கின்றன. 'கிராம ஊழியன்' விசேட மலர் ஒன்றில் **'இலக்கியப்பாதையில்'** என்கிற கட்டுரையே முதலாவது கட்டுரையாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அக் கட்டுரையின் ஆசிரியர் ஈழத்துப் பிரபல கவிஞரும், விமர்சகருமான பண்டிதர் **சோ. தியாகராஜன்** அவர்களாவர். அதனைக்கண்டு ஈழமும் தமிழகமுந் திடுக்குற்றன. பத்திரிகை ஆசிரியரின் துணிச்சல் பாராட்டத் தக்கது. அதே ஆண்டு மலரில், **ச. அம்பிகை பாகன், சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோன், இராஜ அரியரத்தினம்** ஆகியோரும் இடம் பெற்றிருந்தார்கள். 'இலக்கிய வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்டிருந்த அந்தப் பத்திரிகை, தரமான விடயங்கள் எங்கிருந்து வந்தாலும் முக்கியத்துவங் கொடுத்துப் பிரசுரித்திருக்க, வியாபார நோக்கத்தோடு ஈழத்துப் பத்திரிகைச் சந்தையிலே புகுந்துள்ள இரண்டாந்தரப் பத்திரிகைகள்கூட, ஈழத்து எழுத்தாளரை ஏன் புறக்கணிக்க வேண்டும்?' என்கிற நியாயமான கேள்வி ஈழத்து எழுத்தாளர்

வட்டாரத்திற் சலசலப்பினை உண்டாக்கியதில் வியப்பில்லை.

'கிராம ஊழியன்' மூலமும், 'மறுமலர்ச்சி' மூலமும் எழுத்துலகிற் புகுந்த இளங்கவிஞர்களுட் பலர், இப்பொழுது ஈழத்தின் தரமான கவிஞர்களாக விளங்குவதைக் காணலாம். நாவற்குழியூர் நடராசன், 'மஹாகவி', 'சாரதா' (க. இ. சரவணமுத்து), சோ. தியாகராஜன், செ. கதிரேசபிள்ளை ஆகியோரைப் பெயர்சொல்லிக் குறிப்பிடலாம்.

நாவற்குழியூர் நடராசன் புதுப்புது பிரசிச்னைகளைக் கவிதைகள் மூலம் எழுப்பிப் புதுப்பாதை வகுத்துக் கொண்டு முன்னேறியவராவர். திருலோக சீதாராம் தொகுத்த தற்காலக் கவிமலர்களின் தொகுப்பில் இவரது சிலம்பொலி இடம்பெற்றுள்ளது. தற்பொழுது இலங்கை வானொலியின் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாகப் பதவி வகிக்கும் இவர், பல கவியரங்குகளை வானொலியிலே நடாத்திப் பரிசளித்து, ஈழத்தின் கவிதையூற்று வற்றிவிடாமற் பாதுகாத்து வருகின்றார். இவரது கவிதைகள் 'சிலம்பொலி' என்ற நூலாக வெளிவந்திருக்கிறது. அது தரமான கவிதைநூலாகும்.

ஈழத்துக் கவிதை உலகிலே 'மஹாகவி' (து. உருத்திர மூர்த்தி)க்கெனத் தனியான இடமுண்டு. கிராமத்து அழகுகளையும், அம்மக்களின் இன்பதுன்பங்களையும் அவரது பாடல்களிற் காணலாம். பற்பல சந்தங்களிற் பலவகைத் திரிபுகொண்டு அவர் பாடுகின்றார். 'வள்ளி' என்ற கவிதைத் தொகுதி அவரது பெருமையில் ஒரு பகுதியைத் தான் புலப்படுத்துகின்றது. இன்னுஞ் சில தொகுதி

கள் வெளிவரவேண்டும். அவை ஈழத்தின் புகழை நிலைநாட்டும். ஆனால், அவருடைய இடைக்காலப் பாடல்களிற் சில வரிப்பாடல்களைப் போலத் தோற்றமளிப்பனவாகவும், மடங்கியும் முறிந்தும் விளக்கக் குறைவாக்க் காணப்படுவதாகவும், சில விமர்சகர்கள் அபிப்பிராயப் படுகின்றார்கள். 'கல்லழகி','சடங்கு' முதலிய சிறு காவியங்களும் அதன் பின் பாடியவையும் தரமாக அமைந்திருக்கின்றன.

பிரபல எழுத்தாளரான சோ. சிவபாத சுந்தரத்தின் தம்பியாகிய தியாகராஜன் ஒரு கண்டனக் காரராக எழுத்துலகிற் புகுந்தார். இலக்கிய நயங்களை எழுதுபவர்களை எடைபோடுவதில் சமர்த்துப் பெற்றவர். ஆனால், அவரது புகழ் இவற்றிலே நிலைபெறவில்லை. அவர் பாடிய குழந்தைப் பாடல்களும், பெரியோரைப்பற்றி எழுதிய பாடல்களும் அவரைக் கவிஞர் வரிசையிலே உயர்த்தி வைத்தன. பண்டித பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியராக வெளிவந்த அவர், தனது முழு ஆற்றலையும் வெளிக்காட்ட ஆயத்தமாகும்பொழுது, இலக்கியங்களோடு தொடர்பில்லாத உள்ளூர்த் தலைமைக் காரர் உத்தியோகங் கிடைத்துவிட்டது. அவ்வுத்தியோகம் இலக்கிய ஆர்வத்தினைப் பின்னுக்குத் தள்ளினாலும், நீறு பூத்த நெருப்பாக இலக்கிய ஆர்வம் கனன்றுகொண்டிருந்தது. அவர் தற்பொழுது ஆசிரிய உலகிற்குத் திரும்பிவந்துள்ளமை கவிதை உலகிற்கு நல்லதென்பது எனது எண்ணமாகும்.

நல்ல கருத்தாழமும், ஓசை நயங்கெடாதது மாகிய கவிதைகளை ஆரம்ப காலத்திற் பாடிய கதிரேசபிள்ளை, பிற்காலத்திற் கல்லூரி நாடகங்களிற்